Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-15 | 31-07-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-163


S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12150)

# தேசியத்தலைவர் பிரபாகரன் காலம் தமிழருடைய மீள் எழுச்சிக்காலம்!

## மட்டு.அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பொதுமக்களுக்கு தற்பாதுகாப்பு பயிற்சிவழங்கப்படுவது வழமையான நடவடிக்கையாகும். வன்னி நிலப்பரப்பில் இருக்கின்ற எல்லோரும் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். எங்களுடைய தலைவருடைய காலம் தமிழர்கள் ஒரு மீள் எழுச்சிபெறுகின்ற-தங்களுடைய மரபுகளைப் பேணுகின்ற ஒரு காலகட்டமாக இருப்பதனால் இந்த ஒரு எழுச்சிகரமான பயிற்சியை அனைவரும் பெறுவதற்கு விரும்புகிறார்கள். இவ்வாறு மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் நேற்று பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

போர்ச் சூழல் ஒன்று மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளாதா? என்று கேட்ட போது; அப்படியொரு உணர்வு சிலருக்கு வரக்கூடும். ஏனென்றால் சிலர் பேச்சுவார்த்தை போய்நிற்கின்ற அந்த இடத்தை பார்த்து-இதோடு ஒப்பிடுபவர்களுக்கு இப்படியொரு தோற்றப்பாடு தோன்றக் கூடும். இருந்தாலும் இது தமிழீழம் எங்கிலும்-அதாவது எங்களுடைய வடக்கு கிழக்கு தமிழர் தாயகப்பகுதி எங்கிலும் வழமையான விடயம் தான் என்று கூறமுடியும் என்றார்.

கொழும்பிலுள்ள யுனிசெப் குழந்தைகள் நிதியமும், ஐ.நா. அமைப்பும் கூட விடுதலைப் புலிகளினால் தொடர்ந்தும் இளஞ்சிறுவர்கள் படையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் நிலையத்தை படம் பிடித்த மூன்று இளைஞர்கள் கைது

(திருகோணமலை)

திருகோணமலையில் இந்திய ஒயில் நிறுவனத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையத்துடனான பிரதேசத்தைப் புகைப்படம் பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் மூன்று இளைஞர்களை அந்த நிறுவனத்தின் பாதுகாப்பு ஊழியர்கள் நேற்று சீனன்குடா பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட மூவரில் இருவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள் என்றும் மற்றவர் திருகோணமலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

28.07.2005 அன்று சுகயீனம் காரணமாகப் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை இசைமுடி (தங்கவேல் தயாசீலன், குச்சவெளி, வீரஞ்சோலை 2 ஆம் வட்டாரம், திருமலை) என்ற போராளியே சாவடைந்துள்ளார்.

இம் மாவீரருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## உள்ளூராட்சித் தேர்தல்கள் வருட இறுதிக்குள் நடக்கலாம்?

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் சனாதிபதித் தேர்தல் நடைபெறலாம் என பலரும் எதிர்பார்க்கின்ற போதும் அதற்குப் பதிலாக உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படலாம் என்ற ஊகங்கள் எழுந்துள்ளன.

கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள 12 தேர்தல் தொகுதிகளிலும் இயங்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் கிளைகளின் பிரதிநிதிகளுக்கும், உள்ளூராட்சி சபைகளின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கும் தற்போது மேற்கொள்ளப்படவேண்டிய கட்சியின் செயற்திட்டங்கள் பற்றி விளக்கமளிக்கும் கூட்டமொன்று கண்டியில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தொகுதிகள்,கிராமங்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் கவனத்திற்கு...

ஈழநாதம் நாளேட்டின் விலை நாளை முதல் ரூபா 10.00 (பத்து) ஆக இருக்கும் என்பதனை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

## ஏழுவயதுச் சிறுமி மீது பாலியல் பலாத்காரம்

(செட்டிகுளம்)

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் ஏழு வயதுச் சிறுமி ஒருவர் மீது பாலியல் பலாத்காரம் புரியப்பட்டிருப்பது தொடர்பாக வவுனியா பொலிசாருக்கு முறைபாடு கிடைத்திருப்பதாக வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சிறுமி மீது பாலியல் பலாத்காரம் புரியப்பட்ட நபரினை வவுனியா பொலிசார் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் இடம் பெற்ற இந்தப் பாலியல் பலாத்காரம் தொடர்பாக மேற்படி சிறுமி அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர்மீது பாலியல் பலாத்காரம் புரியப்பட்டமை உறுதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிவழியில் செயற்படும் அமைப்புக்களுக்கு அமெரிக்காவில் உள்ளவர்கள்ஆதரவளிக்கலாம்

### அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவிலுள்ள அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் அமைதி வழியில் செயற்படும் அமைப்புக்களுக்கு அதரவளிக்க உரிமையுண்டு என்று அமெரிக்க நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இலங்கையிலுள்ள விடுதலைப் புலிகளின்கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் துருக்கி நாட்டிலுள்ள குர்திஷ் தான் அமைப்பின் பகுதிகளிலும் இயங்கும் அரசியல் அமைப்புக்களுக்கு உதவி வழங்குவதில் இருந்த தடைகளுக்கு எதிராக, சட்டபூர்வ உரிமைக்கான மையத்தினால் தொடரப்பட்ட வழக்கொன்றிற்கு ஆதரவாகவே லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குறிப்பாக ,கடந்த ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலையினால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளான வடக்கு கிழக்கு கரையோரம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருப்பதும் அங்கு பாதிக்கப்பட்ட மக்களின் அத்தியாவசிய தேவைகளின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை-பிரித்தானிய நல்லுறவைப்பேண யுத்தக்கப்பல்கள் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கும் பிரித்தானியாவுக்குமிடையிலான நல்லுறவைப் பேணும் வகையில் பிரித்தானியக் கடற்படை யுத்தக்கப்பலொன்றும், துணைக் கப்பலொன்றும் மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் ஐந்தாம் திகதி இலங்கை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எச்.எம். எஸ்.யோர்க் எனும் யுத்தக்கப்பலும் பிளக்ரோவர் எனும் துணைக் கப்பலுமே மூன்று தினங்கள் இலங்கையில் தரித்து நிற்கவுள்ளன.

இது தொடர்பாக பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் பிரித்தானியத் தூதுவர் ஸ்டீபன் இவான்ஸ் குறிப்பிடு கையில்; இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கு மிடையிலான நல்லுறவைத் தொடர்ந்து பேணும் வகையிலே மேற்படி இரு கப்பல்களும் இலங்கை வருகின்றன.

சுனாமி பேரலைத் தாக்கத்தால் இலங்கை பாதிக்கப்பட்டபோது, பிரித்தானியாவிலிருந்து உடனடியாக கடற்படைக் கப்பல்கள் இலங்கை வந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)



## தேசத்தினுடைய நலமேம்பாட்டு விடயத்தில் சுகாதார சேவை கரிசனை காட்டி வருகின்றது

### தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்ரமன்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ சுகாதார சேவையானது இந்த தேசத்தினுடைய நல மேம்பாடு தொடர்பான விடயத்திலே மிகுந்த கரிசனை காட்டி வருகின்றது. அதிலே உளநலம் என்பது மிக முக்கியமானது.

இவ்வாறு நேற்று நடைபெற்ற உளவியல் ஒருங்கிணைப்புக்குழு அமைப்பதற்கான ஒன்று கூடலில் தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் விக்ரமன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்; கடந்த காலங்களிலே உளநல பயிற்சிகளையும், அதற்கான பணிகளையும் குறிப்பிடத்தக்க அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் வழங்கி வருகின்றன. இருந்தபோதிலும் நாம் எல்லோரும் இணைந்த ஒரு பங்குபற்றல் இல்லாத தன்மையினை எம்மால் அவதானிக்கக்கூடியதாகவிருந்தது.

அந்த வகையிலேயே நாங்கள் ஒரு குழு நிலையாக இயங்குகின்ற தன்மையினைக் கொண்டுவர வேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**குழாய்க்கிணறு அகழ்வதற்கான கேள்வி கோரல்**

கிளி/மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம்- செல்வாநகர்-கிளிநொச்சி . மேற்படி வேலைக்கு உரியவர்களிடமிருந்து கேள்வி பெற்றுக் கொள்ள மேற்காட்டப்பட்ட முகவரிக்கு 05.08.2005க்கு முன்னதாக நேரடியாக சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். (12386)

## கடை விற்பனைக்கு

கிளிநொச்சி பொது வைத்திய சாலைக்கும், சக்சேரிக்கும் இடையில் கிணறு, மலசல கூட வசதியுடன் கடை விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவர்:- வன்னியன பல் பொருள் வாணிபம், கச்சேரி முன்பாக (பிரபா) கிளிநொச்சி. T.P.021.2285776.

# குடிநீர் வழங்கல் பாதைகள் யாவும் யாழ்.இல் மறுசீரமைக்கப்பட வேண்டும்

### — யாழ். மாநகர ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரப்பகுதியில் யாழ். மாநகரசபையினரால் மேற்கொள்ளப்படும் குடிநீர் வழங்கல் பாதைகள் மறுசீரமைக்கப்படல் வேண்டுமென யாழ். மாநகரசபையின் ஆணையாளர் கலாநிதி க.குணராஜா கூறியுள்ளார்.

யாழ்.மாநகரசபையால் தற்போது யாழ். மாநகரப்பகுதிக்கு குடிநீர் வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் நீர்வழங்கல்பாதைகளும், இப்பாதைகளூடாக செல்லும் நீர்க்குழாய்களும் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டவை ஆகும்.

எனினும் யாழ். மாநகரப்பகுதியில் 20 வருடங்களுக்கு முன்பிருந்ததைவிட குடிநீர் விநியோக தேவைப்பாடுகள் வேறுபட்டிருப்பதால் நீர்வழங்கல் தேவைப்பாடுள்ள இடத்திற்கு நீர் வழங்கல் இடம் பெறாமலும்,நீர் வழங்கல் தேவை அற்ற இடங்களுக்கு நீர் வழங்கல் இடம் பெறுகின்ற நிலைமைகளும் உள்ளன. அத்துடன் நீர்வழங்கல் பாதை பழமையானதாக இருப்பதால் இன் நீர் வழங்கல் பாதையில் பொருத்தப்பட்டுள்ள குழாய்கள் சேதமடைந்து நீர் விரயம் ஏற்படுகின்ற நிலைமையும் காணப்படுகிறது.

எனவே இதனால் குடிநீர் பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. இதனைப் போக்க வேண்டுமாயின் பொருத்தமான வகையில் குடிநீர் வழங்கல் நடவடிக்கைகளையும், விநியோகப் பாதைகளையும் மறுசீரமைப்பது அவசியமென யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (33)

# மன்னார் மாவட்டத்தில் சமாதான கருத்தரங்கு

(மன்னார்)

மன்னார் மாவட்ட சர்வோதய இயக்கத்தின் அனுசரணையுடன் வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மாவட்டங்களிலுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்து கொண்ட சமாதானக் கருத்தரங்கு ஒன்று இடம் பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை வரை நான்கு நாட்கள் பண்டாரகம என்ற இடத்திலுள்ள வை.எம்.சி.ஏ என்ற மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

அகில இலங்கை சர்வோதய இயக்கத்தின் தலைவர் ஆரியரத்தன தலைமையில் இடம் பெற்ற இக்கருத்தரங்கில், தேங்கி நிற்கும் சமாதான பேச்சுவார்த்தைகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டுமென்றும் யுத்த சூழ்நிலை தவிர்த்து சமாதானம் நிலவ வழிசெய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (18)

# அகதிகள் நான்கு பேர் தாயகம் திரும்பினர்

இந்தியாவிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் நான்கு பேர் தாயகம் திரும்பியுள்ளார்கள்.

நேற்று முன்தினம் இந்தியா விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகில் வசித்த இவர்கள் இராமேஸ்வரத்திலிருந்து இந்திய மீன்பிடிப்படகின் மூலமே தாயகம் திரும்பியுள் ளார்கள்.

பேசாலை கடற்பரப்பில் இறக்கி விடப்பட்ட இவர்கள் பின்னர் தலை மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு சென்று சரணடைந்தார்கள். இவர்களை தலைமன்னார் பொலிசார் மன்னார் நீதிபதி முன்னிலையில் ஆஜர் படுத்தியவேளை அவர்களை மனனார் நீதிபதி அவர்களது சொந்த இடமான வவுனியா, குருமன்காடு, பேசாலை ஏழாம் வட்டாரம் ஆகிய இடங்களுக்கு மன்னார் நகர கிராம உத்தியோகத்தர்கள் மூலம் அனுப்பி வைக்க உத்தரவிட்டார் (18)

# யாழ்.மாவட்ட மருந்துக் களஞ்சியம் பண்ணைப்பகுதியில் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் 12.3 மில்லியன் ரூபா செலவில் யாழ்.மாவட்டத்துக்கான மருந்துக் களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

வடக்கு கிழக்கு மாகாண சுகாதார பணிமனையின் வேண்டுகோளுக்கு அமைவாக யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் இந்த மருந்துக் களஞ்சியத்துக்கான கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

வடக்கு கிழக்கு மாகாண சுகாதாரப் பணிமனையின் கீழ் யாழ். மாவட்டத்தில் இயங்கிவரும் வைத்தியசாலைகளின் மருந்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான மருந்துப் பொருட்களை களஞ்சியப் படுத்தி வைப்பதற்காகவே இந்த மருந்துக் களஞ்சியம் அமைக்கப்பட்டுவருகிறது. (33)

# உயிலங்குளம் றோ.க.வி புதிய கட்டட திறப்பு விழா

(மன்னார்)

மன்னார் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க வித்தியாலய இரண்டு மாடிக்கட்டடத் திறப்புவிழா நேற்று இடம் பெற்றது.

காலை 9.30 மணியளவில் இடம் பெற்ற நிகழ்வில் கட்டடத்தினை மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். மேலும் நிகழ்வில் நிகொட் பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆர்.ராஜரத்தினம் கலந்து கொண்டார்.

உலக வங்கியின் நிதியுதவியுடன் நிகொட் நிறுவன அனுசரணையுடன் 49 இலட்சம் ரூபா செலவில் இக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்குரிய சகல ஏற்பாடுகளையும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது .(18)

# 15 பாடசாலைகள் மீள்நிர்மாணம்

யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேதமடைந்து போன 15 பாடசாலைகளை மீள் நிர்மாணம் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சுனாமி அனர்த்த புனர்வாழ்வுக்கிளையின் தகவல் பிரிவு அறிவித்துள்ளது.

இப் 15 பாடசாலைகளையும் சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் மீள் நிர்மாணம் செய்து வருகின்றன.

இதில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஆறு பாடசாலைகளையும், ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் இரண்டு பாடசாலைகளையும், எஸ்.டி.சி என்ற அரசசார்பற்ற நிறுவனம் ஐந்து பாடசாலைகளையும், ஜே.ஐ.சி.ஏ, என்ற அமைப்பு மற்றும் றொட்றி இன்ரநசனல் ஆகிய அமைப்புகள் தலா ஒவ்வொரு பாடசாலைகளாக மொத்தம் இரு பாடசாலைகளையும் நிர்மாணிக்கவுள்ளன என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீதி புனரமைப்பு

மடுதிருப்பதிப் பகுதியில் தற்சமயம் உள் வீதிகளும், பிரதான வீதிகளும் கடந்த 20 வருடங்களுக்கு பின்னர் புனரமைப்புச் செய்யப் பட்டுவருகின்றன.

வடமாகாண வீதிகள் அபிவிருத்தி சபையின் பனிப்பாளரின் பணிப்பின் பிரகாரம் இவ்வீதிகள் யாவும் செப்பனிடப்படுகின்றன.

இதற்கு சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தமது அமைச்சிலிருந்து விசேட நிதியை ஒதுக்கியிருப்பதாக தெரியவருகிறது (18)


# சுனாமியால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு சோஆ நிறுவனம் மானிய உதவி

(முல்லைத்தீவு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட அளம்பில் பிரதேச வர்த்தகர்களின் நலன் கருதி கடந்த 27 ஆம் திகதி சோஆ(ZOA) நிறுவனம் 66 வர்த்தகர் களுக்கு ஐந்து இலட்சம் ரூபா நிதியினை மானிய அடிப்படையில் வழங்கியுள்ளது.

அளம்பில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் அளம்பில் பிரதேச வர்த்தக சங்கத்தலைவர் து.பொன்னுச்சாமி தலைமையில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கடற்புலிகளின் அளம்பில் பிரதேசப் பொறுப்பாளர் அரவிந்தன், அளம்பில் வடக்கு கிராம அலுவலர் தெய்வேந்திரம்பிள்ளை, சோஆ நிறுவன முல்லைப்பிரதேச இணைப்பாளர் கிறிஸ்தோப்பர் வர்த்தகசங்கச் செயலாளர் ப.சுதர்சன், பொருளாளர் செ. அன்ரனி ஆகியோர் 66 வர்த்தகர்களுக்கு பணம் வழங்கினார்கள். (20)



விசுவமடு விவசாயிகள் பலநோக்கு கூட்டுறவுச் சங்க
அரிசி ஆலை, அரைக்கும் ஆலை
திறப்பு விழா
காலம்: 01.08.2005 திங்கட்கிழமை
நேரம்: முற்பகல் 11.00 மணி
இடம்: வள்ளுவர்புரம் விசுவமடு
தலைவர்: திரு.வ. பத்மநாதன் (சங்கத்தலைவர்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தலைவர் ,பணிப்பாளர்கள் ,பணியாளர்கள்,
விசுவமடு விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்.
(6504)

# லண்டன் நகரத்தில் எந்த நேரத்திலும் குண்டு வெடிக்கலாம்; பொலிசார் எச்சரிக்கை



லண்டனில் கடந்த வாரம் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புடன், தொடர்புடையவர்களெனக் கருதப்படும் நான்கு தீவிரவாதிகளை லண்டன் பொலிசார் கைது செய்துள்ள நிலையில் முன்னர் வெளியிடப்பட்ட புகைப்படங்கள்.

(லண்டன்)

**"தீவிரவாதிகள் எந்த நேரத்திலும் லண்டன் நகரில் மீண்டும் தாக்குதல் நடத்தலாம்" என்று பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

லண்டனில் கடந்த ஏழாம் திகதி ரயில்களிலும், பேருந்திலும் குண்டு வெடித்ததில் 50இற்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். அதைத்தொடர்ந்து கடந்த 21ஆம் திகதி அதே போல மூன்று ரயில் நிலையங்களிலும், பேருந்திலும் குண்டுகள் வைக்கப்பட்டன. ஆனால் அவை வெடிக்கவில்லை. இது தவிர லூடன் ரயில் நிலையத்தில் 16 குண்டுகளுடன் நின்ற ஒரு கார் கண்டு பிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக மூன்று பெண்கள் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டனர். குண்டு வைத்த நான்கு தீவிரவாதிகளில் ஒருவர் பிடிபட்டார். மேலும் மூன்று பேரை பொலிசார் தேடிவருகின்றார்கள்.

இந்த நிலையில் தீவிரவாதிகள் எந்த நேரத்திலும் லண்டன் நகரில் மீண்டும் தாக்குதல் நடத்தலாம் என்று லண்டன் மாநகர பொலிஸ் கமிஷனர் சர்இயான் பிளேர் எச்சரித்துள்ளார்.



லண்டன் நொட்டிங்கில் மாவட்டத்தில் கடந்த 21 ஆம் திகதி போக்குவரத்துச் சேவை மீது நடத்தப்பட்ட தாக்குதலுடன் தொடர்பு பட்டவர்கள் எனக் கருதப்படும் மூவர் கைது செய்யப்பட்ட பிரதேசத்திற்கு அண்மையாக ஆயுதங்களுடன் பொலிசார் நிலையெடுத்து நிற்கின்றனர்.

# தீவிரவாதத் தாக்குதலுக்கு முஸ்லிம் அறிஞர்கள் கண்டனம் "தற்கொலைப் படையினர் தியாகிகள் அல்ல, கிரிமினல்கள்"

(வோஷிங்டன்)

தீவிரவாதிகள் அப்பாவிப் பொதுமக்களை குண்டுவைத்து கொன்று குவிப்பது இஸ்லாத்துக்கு எதிரானது என்றும் தற்கொலைப் படையினர் தியாகிகள் அல்ல, அவர்கள் கிரிமினல்கள் என்றும் முஸ்லிம் அறிஞர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா, இந்தோனேஷியா, இங்கிலாந்து, ஸ்பெயின் என்று பல்வேறு நாடுகளிலும் தீவிரவாதிகள் குண்டுகளை வெடிக்கச் செய்து உயிரிழப்பு ஏற்படுத்துவதற்கு முஸ்லிம் அறிஞர்கள் முதல் முறையாக கண்டனம் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவைச் சேர்ந்த 130 முஸ்லிம் அறிஞர்களை கொண்ட குழு (பிக் சபை) அனைத்து வகையான தீவிரவாதச் செயல்களும் இஸ்லாத்துக்கு எதிரானவை என்பதால் அதில் ஈடுபடவும், திவிரவாதிகளுக்கு உதவி செய்யவும் தடை விதித்து பட்வா (மத உத்தவு) பிறப்பிப்பதாக அறிவித்தது.

அமெரிக்காவிலுள்ள 600 க்கும் மேற்பட்ட மசூதிகளிலும் உள்ள இமாம்கள் இந்த 'பட்வா'வை வாசிக்க வேண்டும் என்று அறிஞர்கள் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

அமெரிக்காவிலுள்ள 130 முஸ்லிம் அமைப்புகளும் இந்த 'பட்வா'வை ஏற்றுக் கொண்டு உள்ளன. 'பட்வா' வெளியிட்டுள்ள முஸ்லிம் அறிஞர்கள் இஸ்லாமிய நீதி நெறியிலும் சட்டத்திலும் பயிற்சி பெற்றவர்கள். இஸ்லாமிய சட்டத்துக்கு விளக்கம் தரத் தகுதி படைத்தவர்கள் ஆவார்கள்.

இந்த அறிஞர்கள் குழு நிருபர்களிடம் கூறியதாவது:- மதத் தீவிரவாதத்தையும், அப்பாவிகளுக்கெதிராக வன்முறையைப் பயன்படுத்துவதையும் இஸ்லாம் கண்டிக்கிறது. தீவிரவாதத்தையோ, பயங்கரவாதத்தையோ இஸ்லாம் நியாயப்படுத்தவில்லை. தற்கொலைத் தாக்குதல் மூலமோ அல்லது வேறு எந்த வகையிலுமோ அப்பாவிகளின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் தீங்கு விளைவிப்பது இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டு உள்ளது. இந்த காட்டுமிராண்டித்தனமான செயல்களில் ஈடுபடுபவர்கள் தியாகிகள் அல்ல. கிரிமினல்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

## பாகிஸ்தானில் வெளிநாட்டு மாணவர்களுக்கு தடை சட்டம் பிறப்பிக்க முஷாரப் முடிவு

பாகிஸ்தானிலுள்ள இஸ்லாமிய பள்ளிகளில் வெளிநாட்டு மாணவர்கள் படிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு மாணவர்கள் அனைவரையும் உடனடியாக அந்தப் பள்ளிகளில் இருந்து நீக்கவும், உத்தரவிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் முழுவதும் இது போன்று பத்தாயிரம் பள்ளிகள் உள்ளன. இவற்றில் 1,400 பேர் வெளிநாட்டு மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இந்த மாணவர்களை நீக்க விரைவில் அவசர சட்டம் கொண்டு வரப்படும் என்றும் சனாதிபதி முஷாரப் அறிவித்துள்ளார். இனி வெளிநாட்டு மாணவர்கள் அங்கு படிக்க விசா வழங்கப்படாது என்றும் முஷாரப் அறிவித்துள்ளார்.

இஸ்லாமிய பள்ளிகள் மற்றும் மத சம்பந்தமான நிறுவனங்கள் அனைத்தும் இந்த ஆண்டு இறுதிக்குள் அரசிடம் பதிவு செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இரட்டை குடியுரிமை பெற்றவர்களும் பாகிஸ்தானை விட்டு வெளியேற முஷாரப் உத்தரவிட்டிருக்கிறார்.



பாக்தாத் அல்சவி பள்ளிவாசலிற்கு முன்னால் சனி முஸ்லிம்களின் வெள்ளிக்கிழமை தொழுகையை நோக்கி அமெரிக்க, ஈராக்கியப் படையினர் தாக்குல் நடத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சனி முஸ்லிம்கள் சுலோகங்களைத் தாங்கியவாறும், கோசங்களை எழும்பியவாறும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

## வெள்ளத்தால் இறந்தவர்களுக்கு பாகிஸ்தான் தலைவர்கள் இரங்கல்

(இஸ்லாமபாத்)

மகாராஷ்டிராவில் வெள்ளத்தால் இறந்தவர்களுக்கு பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பும், அந் நாட்டுப் பிரதமர் சவுகத் அஜீசும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

அதிபர் முஷாரப் சனாதிபதி அப்துல் கலாமிற்கு அனுப்பியுள்ள இரங்கல் செய்தியில் மகாராஷ்டிரா வெள்ளப்பெருக்கில் ஏற்பட்ட உயிரிழப்பு மிகுந்த மன வேதனையை அளிக்கிறது. இது ஒரு ஈடுசெய்ய முடியாத இழப்பு. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அவர்களின் நலனுக்காக கடவுளை வேண்டிக் கொள்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

பாக். பிரதமர் சவுகத் அஜீஸ் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு அனுப்பியுள்ள இரங்கல் செய்தியில் வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தத் துக்கத்தில் பாகிஸ்தான் மக்களும் பங்கேற்றுக் கொள்கின்றனர் எனக் கூறியுள்ளார்.



மொசூலில் அமெரிக்கப் படையினர் ரோந்துப் பணியின் போது வாயிலில் குழந்தையைத் தூக்கியவாறு நிற்கும் ஈராக்கியர் ஒருவருடன் உரையாடுகின்றனர்.

## சீனாவில் பன்றி நோய் 31 பேர் உயிரிழப்பு

சீனாவில் நோயுற்ற பன்றியில் இருந்த கிருமிகள் மனிதர்களைத் தாக்கியதில் 31 பேர் பலியானார்கள். இந்த நோய் மேலும், 152 பேரைத் தொற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிச்சுவான் மாநிலத்தை இந்த நோய் கடுமையாகப் பாதித்துள்ளது. நோய் தாக்கிய பன்றிக் கறியைத் உண்டதால் இந்த நோய் பரவி வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்த நோய் இப்போது கொங்கொங்குக்கும் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆட்சேர்ப்பு மையத்தில் தற்கொலைத் தாக்குதல் 25 பேர் உடல் சிதறி பலி; 35 பேர் காயம்

(மொசூல்)

வடக்கு ஈராக் பகுதியிலுள்ள ராபியா நகரில் இராணுவ ஆட்சேர்ப்பு மையம் அருகே தீவிரவாதி ஒருவர் நடத்திய குண்டுத் தாக்குதலில் 25 பேர் உடல் சிதறி பலியானார்கள். 35 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தக் குண்டுத் தாக்குதலில் பலியானவர்கள் இளைஞர்கள் எனவும் இவர்கள் இராணுவத்தில் சேர கையெழுத்துப் போடுவதற்காக காத்திருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஈராக்கில் விமானக் குண்டுவீச்சு ஒன்பது தீவிரவாதிகள் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் பாக்தாத் அருகே உள்ள ஒரு கிராமத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க ஈராக்கிய இராணுவம் மீது தீவிரவாதிகள் ரொக்கெட் குண்டுகளை வீசித் தாக்கியதைத் தொடர்ந்து இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தீவிரவாதிகளின் மறைவிடங்கள் மீது விமானம் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் சிரியா நாட்டைச் சேர்ந்த ஐந்து பேர் உட்பட ஒன்பது தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் தீவிரவாதிகளின் மறைவிடங்களும், பதுங்கு குழிகளும் அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# செயற்கை கருத்தரிப்பு மூலம் சுறாமீனை உருவாக்கும் விஞ்ஞானிகள்

சோதனைக் குழாய் மூலம் செயற்கை கருத்தரிப்பு செய்து குழந்தை பிறக்க வைக்கும் சாதனையை 27 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து வைத்தியர்கள் செய்திருந்தார்கள்.

சோதனைக் குழாய் மூலம் செயற்கையாக கருத்தரிக்க வைத்து குழந்தை பிறக்க வைப்பதுபோல் சுறா மீன்களை உருவாக்கவும் விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய கடற் பகுதியில் அபூர்வ இன சுறா மீன்கள் அழியும் நிலையில் உள்ளன. இதே நிலை நீடித்தால் இன்னும் 20 ஆண்டுகளில் இந்த சுறா மீன் இனம் முற்றிலுமாக அழிந்து விடும் அபாயமுள்ளது. இந்த சுறா மீன்களின் வயிற்றில் இரண்டு கர்ப்பப்பைகள் உள்ளன. இதில் ஒரு கர்ப்பப் பையில் உள்ள குட்டி மீன்களை வெளியே தள்ளி அவற்றை பெரிய மீன்கள் தின்று விடுவதும் சுறாமீன்கள் வேட்டையாடப்படுவதும் இந்த வகை மீன் அழிந்து வருவதற்கு முக்கிய காரணங்கள்.

எனவே ஆண் சுறாமீனின் அணுக்களையும் பெண் சுறா மீனின் சினை முட்டைகளையும் தனித்தனியே எடுத்து சோதனைக் குழாயில் இணைய வைத்து அதை இன்னொரு கர்ப்பப்பையில் செலுத்தி சுறா மீனாக வளரச் செய்கிறார்கள்.

முதல் முறையாக 8.5 அடி நீள பெண் சுறாமீனில் இந்த சோதனையை தொடங்கி உள்ளனர். இன்னும் ஒரு சில மாதங்களில் சோதனைக் குழாய் சுறாமீன் உருவாகி விடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

-வட-கிழக்கில் சிறுவர்களின் உளநல மேம்பாட்டிற்கான-

# சிறுவர் பொழுதுபோக்கு மையங்களை அமைக்கும் செயற்திட்டம் ஆரம்பம்!

(அலுவலக செய்தியாளர்)

**தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வடமராட்சி கிழக்கிலுள்ள 17 இடைத்தங்கல் முகாம்களில் சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு மையங்களை அமைக்கும் திட்டத்தினை உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளதுடன் இதற்கான நிதிப்பங்களிப்பை யுனிசெப் நிறுவனம் வழங்கியுள்ளது.**

இதன்மூலம் இளம் வயதிலேயே மிகப்பெரிய இழப்புக்களையும், சோகங்களையும் உணர்ந்து உளரீதியாகப் பாதிக்கப்பட்ட இடைத்தங்கல் முகாம்களில் வாழ்கின்ற சிறார்களை உற்சாகமூட்டி, இழப்பிலிருந்து விடுபடச்செய்யும் நோக்கோடு சிறுவர் பொழுதுபோக்கு மையங்கள் அமைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

இவற்றோடு இணைந்து வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கோடு நூலகங்களும் அமைக்கப்படவுள்ளதுடன் இப் பொழுதுபோக்கு மையங்களை நிர்வகிக்கும் பொறுப்பு இடைத்தங்கல் முகாமில் வாழும் தொண்டர் ஒருவரிடமே ஒப்படைக்கப்படும். அவர்களுக்கான பொறுப்பை ஒப்படைத்து அவர்களை நிதி அனுசரணையாளர்களுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறார்களின் உளவியல் பாதிப்புக்களை களைய 20,000 டொலர் உதவி

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறார்கள், குறிப்பாக மாணவர்களின் நன்மை கருதி அவர்களின் உளவியல் பாதிப்புக்களைக் களையும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்கும் செயற்திட்டங்களுக்காக, யூன் நான்காம் திகதி கனேடிய உதவும் கரங்கள் அமைப்பினால் நடாத்தப்பட்ட நடைபவனியில் 20,000 கனேடிய டொலர்கள் நிதிசேகரிக்கப்பட்டது. இந்த நடைபவனியூடாக சேர்க்கப்பட்ட 20,000 டொலர்களையும், கனேடிய தமிழர் உதவும் கரங்கள் (Canadian Tamil Helping Hands) அமைப்பினர், யூலை மாதம் 13 ஆம் திகதி புதன்கிழமை, கனேடிய தமிழ் இளையோர் (Tyo) அமைப்பிடம் வழங்கினார்கள். கீதவாணி வானொலி நிலையத்தில், நிலைய அதிபர் நடா. ஆர்.ராஜ்குமார் முன்னிலையில், தாயகத்தில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கட்டட நிதிக்காக இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

இத்தாயகம் நோக்கிய இவர்களது முயற்சிக்கு, தங்களது முழுமையான ஆதரவை வழங்கிய வர்த்தகப் பெருமக்கள் மற்றும் கனேடிய தமிழ் உறவுகளுக்கு, தங்களது நன்றியைத் தெரிவிப்பதாக, இந்த நிதி கையளிப்பின் பின்னர், கனேடிய தமிழர் உதவும் கரங்கள் அமைப்பினர் தெரிவித்தார்கள்.




முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்டு மீன்பிடித் தொழில்களை இழந்த மீனவர்களுக்கு மீண்டும் தொழிலுக்குச் செல்வோம். என்ற அடிப் படையில் கியுடெக் -கரித்தாஸ் நிறுவனங்களின் கூட்டு நிதி உதவியில் இரண்டாம் கட்டமாக மீன்பிடி உபகரணங்களை கடல்த்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தினால் கடந்த புதன்கிழமை அன்று 50 பய னாளிகளுக்கு சமாசத்தில் வைத்து வழங்கப்பட்டது. க.தொ கூ.சங்க சமாதத்தலைவரிடம் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவ ரான் அனேன் அதற்கான சான்றிதழைக் கையளிக்கிறார். (படம் சகிலா)

# திருக்குறள் தமிழ் இலக்கியத்திறன் தேர்வு முடிவுகள்

2005 ஆம் ஆண்டுக்கான திருக்குறள் தமிழ் இலக்கியத்திற்ன் போட்டியின் மேலும் சில பெறுபேறுகள் இங்குதரப்படுகின்றன.

மாவட்ட மட்டத்தில் பரிசும் சான்றிதழும் பெறுவோர்

பிரிவு'அ'

முதலாம் இடம் செல்வன் ந.விவேகதன்- கிளி.மத்தியகல்லூரி. இரண்டாம் இடம் செல்வி. வி.அனுசா-திருவையாறு உ.நி.பள்ளி. மூன்றாம் இடம் செல்வி.ப.லதாயினி-கிளி.மத்திய கல்லூரி.

பிரிவு'ஆ'

முதலாம் இடம் செல்வன் தி.துளசிகன்- கிளி.மத்தியகல்லூரி. இரண்டாம் இடம் செல்வி. த.தர்சிகா-இராமநாதபுரம் மேற்கு அ.த.க.ப. மூன்றாம் இடம். செல்வி. சு.கோகிலா- முருகானந்தா உ.நி.ப. செல்வி. இ.கச்தூரி. புனித திரேசாபெண்கள்கல்லூரி. செல்வி. யோ.நிரோஜா-புனித திரேசா பெண்கள் கல்லூரி.

பிரிவு'இ'

முதலாமிடம் செல்வி அ.ரேணுகா-பளை மத்தியகல்லூரி. இரண்டாமிடம் செல்வி இ.அனித்தா-திருவையாறு உ.நி.ப. மூன்றாமிடம் செல்வி தி.சுபாங்கி-கிளி.மத்தியகல்லூரி. செல்வி ஞா.சுடர்விழி-திருவையாறு உ.நி. பள்ளி.

பிரிவு'ஈ'

முதலாமிடம் செல்வி.பா.சுகன்ஜா-கிளி.மத்தியகல்லூரி. இரண்டாமிடம் செல்வி சி.சங்கீதா-பிரமந்தனாறு உ.நி.ப. செல்வி ர.வைச்ணவி- புனிததிரேசா பெண்கள் கல்லூரி. செல்வன் நா.சுடர்வண்ணன்- திருவையாறு உ.நி.பள்ளி. மூன்றாமிடம் செல்வி. இ.சோபிகா-கிளிநொச்சி உ.நி.பள்ளி.

பிரிவு'உ'

முதலாமிடம் செல்வன் கி.சேயோன்-திருவையாறு உ.நி.ப. இரண்டாமிடம். செல்வி.ந.சாமந்தி- திருவையாறு உ.நி.ப. மூன்றாமிடம் செல்வி. ய.கரிசிகா- இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை. செல்வன் மா.சுஜீபன்-கிளிநொச்சி உ.நி.ப.

# அம்பாறை மாவட்டத்தில் கடும் வரட்சி தொற்று நோய்கள் பரவும் அபாயம்!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் பருவமழை தவறி வரட்சி ஏற்பட்டிருக்கின்றது. சிறிய குளங்கள் எல்லாம் வற்றி வரண்டு போய்க்கிடக்கின்றன. இதனால் காட்டு மிருகங்களும், கால் நடைகளும் குடிநீருக்காக கிராமப் புறங்களுக்குள் நுழைய ஆரம்பித்துள்ளன. இதனால் காட்டு யானைகளின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றது என்று காட்டுப் பிரதேசங்களை அண்டியுள்ள கிராம மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

மாவட்டத்திலே பெரிய நீர்த்தேக்கமாகவுள்ள சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டமும் தினசரி குறைந்து கொண்டே வருகின்றது. வரட்சியோடு அனற்காற்றும் வீசிக் கொண்டிருப்பதால் பல தொற்றுநோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கின்றது என்று வைத்திய சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள்.

சுனாமி பேரலைக்குப் பின்பு கரையோரப் பிரதேசங்களிலுள்ள கிணறுகளில் கூட நீர் உவர்த்தன்மை யாக மாறியுள்ளது. இவற்றை நிவர்த்தி செய்வதற்காக கடந்த பல மாதங்களாக பல அரசசார்பற்ற அமைப்புக்கள் கிணற்று நீரை இறைத்ததோடு, கிணறும் சேதமடைந்துள்ளது. தற்போது பல இடங்களில் கிணற்று நீரின் உவர்த்தன்மை மாறவில்லை என்று சம்பந்தப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

# குடும்பப் பதிவு அட்டையினை பெற்றுக்கொள்ள வேண்டுகை

இதுவரை காலமும் குடும்பப் பதிவு அட்டை பெற்றுக் கொள்ளாதோரும், 01.01.2002 இற்கு முன்னர் குடும்பப் பதிவு அட்டை பெற்றுக் கொண்டோரும், தற்போதுள்ள குடும்பப் பதிவு அட்டையின் தரவுகளில் மாற்றம் உடையோரும், உடன் அவ்வப் பிரதேச போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு சரியான தரவுகளுடைய புதிய குடும்பப் பதிவு அட்டையினைப் பெற்றுக் கொள்ளுமாறு போக்குவரத்துக் கண்காணிப்புக் பிரிவின் குடும்பப் பதிவு அட்டைப்பகுதியினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# வவு. போக்குவரத்துச்சபை வளாகத்தில் பெற்றோல் குண்டுகள் வீச்சு!

(வவுனியா)

வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள போக்குவரத்து சபை வளாகத்தினுள் கடந்தவியாழன் இரவு பத்து மணியளவில் பெற்றோல் கைக்குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

இப்பெற்றோல் குண்டுவீச்சால் பேருந்து ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளது. இதற்கிடையில் போக்குவரத்து சபையில் கடமையாற்றும் காவலாளிகள் விரைந்து சென்று பேருந்தில் மூண்ட தீயைக் கட்டுப்படுத்தி அணைத்துள்ளனர்.

போக்குவரத்து சேவையை சீர்குலைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளதாக வவுனியா போக்கு வரத்து சபை முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இரவு ரோந்து சேவையை அதிகரிக்க வவுனியாப் பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# பொது வைத்திய நிபுணரால் மருத்துவ சிகிச்சை

லண்டனில் இருந்து வருகை தந்திருக்கும் பொது வைத்திய நிபுணர் டாக்டர் ஜெகராஜாவினால் பின்வரும் கால ஒழுங்கில் மார்பு சம்பந்தமான நோய்களுக்கும், (ஆஸ்துமா (முட்டு) நாட்பட்ட நோய்களுக்குமான மருத்துவ சிகிச்சையும் ஆலோசனையும் வழங்கவுள்ளதால் பயன்பெற விரும்புவோர் பொன்னம்பலம் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்புகொள்ளவும்.

மாதம்தோறும் முதலாம், மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளில்- பொன்னம்பலம் மருத்துவமனை-புதுக்குடியிருப்பிலும், இரண்டாம், நான்காம் ஞாயிற்றுக்கிழமைகளில் பொன்னம்பலம் மருத்துவமனை-கிளிநொச்சியிலும் தொடர்பு கொள்ளவும்

# திருநாவற்குளம் சம்பவம் பீதியூட்டும் நடவடிக்கையே; போ.நி.க.குழு கருத்துக்கு பா. உறுப்பினர்கள் கண்டனம்!

(வவுனியா)

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் வவுனியா மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக் குழு அதிகாரிகளான யோனி சுனிலன், அன்னி ஆகியோரை போர் நிறுத்த காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல், 2.30 மணிக்கு சந்தித்தனர். இந்த சந்திப்பில் வவுனியாவில் அண்மை நாட்களாக இடம்பெற்றுவரும் பல சம்பவங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகவும் நேற்றுமுன்தினம் வவுனியா திருநாவற்குளம் நிர்வாக சேவை காரியாலயத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்

தாம் மேற்படி விடயங்கள் தொடர்பாக தெரிவித்தபோது, மேற்படி தாக்குதலானது புலிகளின் உறுப்பினர்களை கொலைசெய்ய வேண்டும் என்று செய்யவில்லை என்றும் ஒரு பீதியினை ஏற்படுத்தும் வகையில் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் போநிறுத்த கண்காணிப்புக்குழு அதிகாரி தெரிவித்துள்ளார். இதற்குப் பதில் அளித்த சிவநாதன் கிஷோர் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு நடைபெற்ற சமயம் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலானது பீதியினை ஏற்படுத்துவதற்காக் செய்யப்பட்டிருக்கலாம் என்றும் ஆனால் விடுதலைப் புலிகளின் காரியாலயத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலானது நிச்சயமாக திட்டமிட்டு நடத்தப்பட்டிருப்பதாகவும் மட்டக்களப்பு, திருகோணமலை போன்று பதற்றம் ஏற்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் இதனை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு என்ற முறையில் கட்டுப் படுத்த வேண்டும் என்றும் கேட்டு கொண்டதாக சிவநாதன் கிஷோர் தெரிவித்தார். (21,10)

– அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து

# மாகாணமட்ட போட்டிக்கு இரு மாணவர்கள் தெரிவு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய மாணவர்கள் இருவர் மாகாணமட்ட வினாடி வினாப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையே நடாத்திய கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகளில் வவுனியா தெற்கு வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான போட்டிகளிலேயே இம்மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர். வவுனியா தெற்கு கல்வி வலயத்திலுள்ள மிகப் பிரபல்யமான பாடசாலைகள் உட்பட 35 பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகளில் தரம் - 9 மாணவர்களுக்கிடையேயான விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகளில் செல்வன் வே.சாந்தகுமார் என்பவரும் தரம்- 6 மாணவர்களுக்கிடையேயான கணித வினாடி வினாப் போட்டிகளில் செல்வி ம. திலக்ஷியா என்பவருமே வெற்றியீட்டி மாகாண மட்ட வினாடி வினாப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளனர். (10)

# சமுகம் தரக் கோரல்

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றி நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர்களும், தகுதிகாண் நியமனம் பெற்ற ஆங்கில ஆசிரியர்களும், தமிழீழ மாணவர் அமைப்பினால் நியமனம் செய்யப்பட்ட ஆங்கில ஆசிரியர்களும் எதிர்வரும் மூன்றாம் திகதி காலை 9.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமுகம் அளிக்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

# கடற்கோள்அனர்த்த அமெரிக்க உதவிகள் உதவி அமைப்புக்கள் ஊடாக வழங்கப்படும்

## -அமெரிக்கத் தூதரக அதிகாரி தகவல்

(வடமராட்சி)

**சுனாமி கடற்கோள்அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் கரையோரக்கிராமங்களிற்கான அமெரிக்க அரசின் உதவிகள் யு.எஸ்.எயிட் போன்ற உதவி அமைப்புக்கள் மூலமே வழங்கப்படும். எக்காரணம் கொண்டும் நேரடியாக அரசிற்கோ அல்லது சுனாமி பொதுக்கட்டமைப்பிற்கோ வழங்கப்பட மாட்டாதென இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவராலயத்தின் தகவல் அதிகாரி ஹெலனா டபிள்யூ ரதோர் தெரிவித்தார்.**

குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு வியாழக்கிழமை வருகைதந்திருந்த அமெரிக்கத்தூதுவராலயத்தின் உயர் மட்டக குழுவில் ஹெலனா டபிள்யூ ரதோரும் உள்ளடங்கியிருந்தார்.

நல்லூரிலுள்ள யாழ்.பாடி விடுதியில் குடாநாட்டைச்சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர்களையும், பொது அமைப்புக்களது பிரதிநிதிகளையும் குழுவினர் சந்தித்துப்பேச்சு நடாத்தினர்.

அரசிற்கும்-புலிகளுக்குமிடையேயான சுனாமி பொதுக்கட்டமைப்பை கைச்சாத்திடும் விடயத்தில் கூடிய அக்கறை காட்டிய அமெரிக்கா அவ்வாறு கைச்சாத்திடப்பட்ட பொதுக் கட்டமைப்பினூடாக தனது உதவிகளை வழங்கப்போவதில்லையென அறிவித்துள்ளதே என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஹெலனா டபிள்யூ ரதோர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்; "யாழ்.குடாநாட்டில் யு.எஸ்.எயிட் அமைப்பு தனது உள்ளூர் முகவர்கள் சிலர் மூலம் கடந்த ஆண்டுகளில் பத்திற்கும் அதிகமான திட்டங்களை முன்னெடுத்துள்ளது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டிற்கும் இவ்வாறான யு.எஸ்.எயிட் போன்ற உதவி அமைப்புகளூடாக உதவிகள் வழங்கப்படவுள்ளது" என்றார்.

எனினும் யு.எஸ்.எயிட் அமைப்பினால் நேரடியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம் என்பவற்றில் இடம்பெற்ற கட்டட நிர்மாணப் பணிகள் இடையில் கைவிடப்பட்டுள்ளதே என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், இவ்விடயம் தொடர்பாக உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படுமெனக் கூறினார்.

சுனாமி பொதுக்கட்டமைப்பினூடாக உதவிகளை வழங்க அமெரிக்க அரசு மறுத்துள்ளமை, உதவிவழங்கும் ஏனைய நாடுகளுக்கு எவ்வகையிலும் முன்னுதாரணமாகாதென மறுதலித்துப்பேசிய அவர் நிரந்தர சமாதானம் மூலமே இலங்கையில் அமைதியைக் கொண்டுவர முடியுமென நம்பிக்கை வெளியிட்டார். (27)

# அராலிச் சந்தியில் உந்துருளி விபத்து இளைஞர் பலி; மற்றொருவர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மண்கும்பான், அராலி வீதிச் சந்தியில் நடைபெற்ற உந்துருளி விபத்து ஒன்றில் இளைஞர் ஒருவர் பலியாகியதுடன் மற்றும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் மூனறு மணி யளவில் நடைபெற்ற இவ் விபத்துச் சம்பவத்தில் நாரந்தனை தெற்கைச் சேர்ந்த அ. அமிர்தபாலன் (வயது- 26) என்ற இளைஞன் பலியாகியுள் ளதுடன், அதே ஊரைச் சேர்ந்த ஜெ.நிரோஜன் (வயது- 20) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

மண்கும்பான்- அராலி வீதி வழியாக உந்துருளியில் பிரஸ்தாப நபர்கள் இருவரும், மிகவேகமாகச் சென்ற போது ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்த உந்துருளி வீதியிலிருந்து விலகி வீதி ஓரமாக இருந்த மதகு ஒன்றுடன் மோதியது.

இதில் உந்துருளியை ஓட்டிச் சென்றவர் உயிரிழந்ததுடன், பின் இருக்கையில் அமர்ந்து பயணித்தவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (33)

# நடமாடும் மதுபான சேவை; பொதுமக்கள் பெரும் விசனம்

(தென்மராட்சி)

ஆவரங்கால் பகுதியில் ஈருருளியில் நடமாடும் மதுபான வியாபாரிகள் சென்று விற்பனையில் ஈடுபட்டு வருவதால் குடிகாரர்களின் அட்டூழியம் அதிகரித்து வருவதுடன் ஆவரங்கால் சந்தைப்பகுதிகளிலும், அதனை அண்டிய பிரதேசங்களிலும், பல்வேறு பிரச்சினைகள் உருவாகிவருகின்றன.

மாலை வேளைகளில் இப்பகுதியூடாக செல்லும் பெண்களிடம் சேட்டைகள் விடும் சம்பவங்களும், தூஷண வார்த்தைகளால் பெரிதாக கத்திக்கொண்டு இளைஞர்கள் செல்லும் சம்பவங்களும் அதிகரித்து வருவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றுக்கு பிரதான காரணம் இப்பகுதியில் புதிதாக தொடங்கப்பட்டு இருக்கும் நடமாடும் மதுபான சேவையே என்றும் தெரிவிக்கப்படுகிறது.(28)

# உள்ளூராட்சி வாரத்தை கொண்டாட ஏற்பாடு

யாழ் மாவட்டத்திலுள்ள நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் இந்த வருடம் உள்ளூராட்சி வார விழாக்களைக் கொண்டாடுவதற்கு தயாராகி வருகின்றன.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சம்பந்தப்பட்ட எல்லைக்குட்பட்ட பகுதிகளிலிருக்கும் சனசமூக நிலையங்கள், சிறுவர்பாடசாலைகள், வர்த்தக நிறுவனங்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியமட்டங்களில் பல்வேறு போட்டிகளை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவற்றோடு நூல் வெளியீடுகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் சுற்றுச் சூழல் பாதுகாப்புத்தொடர்பான பிரச்சாரப்பணிகள், சிரமதானப்பணிகள், கலைநிகழ்வுகள், என்பவற்றை யும் உள்ளூராட்சி வாரத்தில் நடாத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (37)

# -அச்சுறுத்தியமை, காணாமற்போனமை குறித்து ஊரெழு சிறிலங்கா படைமுகாம் உயரதிகாரியை ம. உ. ஆணைக்குழு விசாரணைக்கு அழைப்பு

(வடமராட்சி)

புகைப்படப்பிடிப்பு நிலையமொன்றின் உரிமையாளரொருவரை அச்சுறுத்தியமை மற்றும் வர்த்தகரொருவர் காணாமல் போனமை தொடர்பில் இலங்கை இராணுவத்தின் ஊரெழு படைமுகாமைச் சேர்ந்த புலனாய்வுப்பிரிவு உயரதிகாரியொருவரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளுக்கு ஆஜராகுமாறு அழைத்துள்ளது.

உரும்பிராய் பகுதியில் "சசிகரா புகைப்படக்கலையகம்" எனும் பெயரில், புகைப்படப்பிடிப்பு நிலையமொன்றை நடாத்திவந்தவரான என். கிசாகரன் எனும் வர்த்தகரை, குறித்த படைமுகாமைச்சேர்ந்த இராணுவ புலனாய்வுப்பிரிவினர் இருவர் தொடர்ச்சியாக அச்சுறுத்தி வந்தனர் அண்மைக்காலமாக தமது முகாமிற்கு விசாரணைக்கு வருமாறு இவ்வர்த்தகரை அவர்களிருவரும் தொடர்ச்சியாக அச்சுறுத்தி வந்திருந்த நிலையில், அவ்வர்த்தகர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடொன்றை செய்திருந்தார்.

இதனிடையே உரும்பிராய் பகுதியைச்சேர்ந்த மற்றொரு வர்த்தகரொருவர் அண்மையில் காணாமல் போன சம்பவம் தொடர்பாக அவரது பெற்றோரால் ஏற்கனவே செய்யப்பட்ட முறைபாடொன்றும் தொடர்ந்தும் ஆணைக் குழுவில் நிலுவையிலுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் நிறுத்திவைக்கப்பட்ட நிலையில் படையினர் பொதுமக்களை விசாரணைக்கு முகாம்களிற்கு அழைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாதென தெரிவித்த ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி ரோஹித பிரியதர்சன அவ்விரு புலனாய்வு பிரிவு அதிகாரிகளிற்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்க தாம் சிபார்சு செய்திருப்பதாகவும் கூறினார்.

அத்துடன் குறித்த படைமுகாமின் பொறுப்பதிகாரியை விசாரணைகளிற்கான ஆணைக்குழு அலுவலகத்தில் எதிர்வரும் புதன்கிழமை ஆஜராக அழைப்பாணை விடுவிக்கப்பட்டுள்ளது. (27)

# பிரதம தபால் அத்தியட்சகரை உடன் நியமிக்க வேண்டுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதம தபால் அலுவலகத்திற்கு பிரதம தபால் அத்தியட்சகரை உடன் நியமிக்க வேண்டுமென பொதுமக்களிடம் இருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாவட்டதபால் அத்தியட்சகராக பணியாற்றி வந்தவர் கடந்த மாதம் ஓய்வு பெற்று சென்று விட்டதால் அந்த இடத்திற்கு புதிதாக ஒருவரை உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், இதன் மூலம் தாமதங்கள் இன்றி அலுவலக பணிகள் நடைபெறவும், பொதுமக்கள் பயன்பெறவும் சம்பந்தப்பட்டோர் முன்வர வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (28)

# தனியார் காணிகளுக்கு ஊடாக படையினர் மீண்டும் பாதையமைப்பு

வலி - வடக்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தனியார் காணிகளுக்கு ஊடாக மீண்டும் பாதை அமைக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

கடந்த மாதம் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள தெல்லிப் பழை வைத்தியசாலை வடக்கு கிழக்கு மாகாண ஆளுனரினால் திறந்து வைக்கப்பட்டது. அங்கு உரையாற்றிய இராணுவத்தளபதி எந்த வகையான இடையூறுகளும் ஏற்படாமல் வைத்தியசாலைக்குச் சென்றுவர நடவடிக்கையெடுக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். இதன்அடிப்படையிலேயே தனியார் காணிகளுக்கு ஊடாக உயர் பாதுகாப்பு வலயத்தின் சூனியப் பிரதேசத்திற்குள் இருக்கும் முன்னரங்க காவல் நிலையத்திற்கு முன்பாக இப்பாதையை அமைக்கும் நடவடிக்கையில் ஈடு பட்டு வருகின்றமை குறிப்பிடக் கூடியதாகும்.

ஏற்கனவே இங்கு இதனூடாக பாதை அமைக்கும் முயற்சிக்கு மக்கள் எதிர்ப்புக் காட்டியதைத் தொடர்ந்து அது கைகவிடப்பட்டமையும் குறிப்பிடத் தக்கதாகும். (41)

# பல்கலை. ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் முடிவுக்கு வந்தது

## ~ கோரிக்கைகள் அரசால் ஏற்கப்பட்டன

(நல்லூர்)

பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கிடையே காணப்பட்ட சம்பள முரண்பாட்டைத் நீக்கக் கோரி கடந்த ஒரு மாத காலமாக இடம்பெற்ற பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டமானது கைவிடப்பட்டு ஊழியர்கள் நேற்று முன்தினம் வேலைக்குத் திரும்பியுள்ளார்கள்.

கடந்த ஒருமாத காலமாக இடம்பெற்ற இவ்வேலை நிறுத்தப் போராட்டமானது கொழும்பில் இடம்பெற்ற அரசாங்கத்துடனான சந்திப்பை அடுத்து ஊழியர்களின் கோரிக்கைகள் இரண்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இவ்வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளமை குறிப்பிடக்கூடியதாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்களும், இப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன் பல்கலைக் கழக உபவேந்தரை அவரது அறை யில் அடைத்து தமது கோரிக்கைக ளுக்கு பதில்தரக்கோரிக்கை விட்ட மையும் சுட்டிக் காட்டக் கூடியதாகும்.

இப்போராட்டம் கடந்த ஒருமாத காலமாக சம்பள முரண்பாட்டை தீர்க்கக் கோரியும் மற்றும் ஊழியர்களின் மாதாந்த படியைக் கொடுக்கக் கோரியும் இடம்பெற்றது. (41)

# சமுர்த்திப் பயனாளிகள் தெரிவில் பெரும் குளறுபடி

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் இதுவரை வழங்கப்பட்ட இடம் பெயர்ந்தோருக்கான நிவாரண முத்திரை நிறுத்தப்பட்டு சமுர்த்தி நிவாரண முத்திரை வழங்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. கணினி மூலம் பயனாளிகள் தெரிவு இடம் பெற்ற போதிலும் பல்வேறு குளறுபடிகளும் இடம் பெற்றுள்ளமையினால் மக்கள் இதற்கு எதிராக போர்க் கொடி தூக்கியுள்ளார்கள்.

மிகவும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கு கிடைக்காத போதிலும் அரச உத்தியோகத்தர்களின் சில குடும்பங்களும் இத் தெரிவில் தெரிவு செய்யப்பட்டுள்ளமை சுட்டிக் காட்டக் கூடியதாகும்

இத் தெரிவானது யாழ்.செயலகத்தில் இருந்து படிவங்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு கணினி மூலம் தெரிவுகள் இடம் பெற்று பெயர்ப பட்டிய்லும் கொழும்பில் இருந்தே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (41)

# பட்டப்பின் கல்வி— டிப்ளோமா பரீட்சைகள்

தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பரீட்சைகளின் பகுதி நேரம் I முழுநேரம் என்பன எதிர்வரும் எட்டாம் திகதி (திங்கட்கிழமை) ஆரம்பமாகும். இதனைத்தொடர்ந்து பகுதிநேரம் IIஇற்கான பரீட்சைகள் நடைபெறும்.

இதற்கான புதிய பரீட்சை நேர அட்டவணையைப் பீடாதிபதி அலுவலகம், உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்திலும், வவுனியா வளாக வியாபாரக்கற்கைகள் பீட விளம்பரப்பலகையிலும் பார்வையிடலாம் என உயர்பட்டப்படிப்புகள் பீடபீடாதிபதி க.கந்தசாமி அறிவித்துள்ளார்.

# பண்டாரநாயக்க குடும்பத்திடமிருந்து ராஜபக்ஷ குடும்பத்திற்கு....

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் தெரிவு ஒருவாறாக முடிவடைந்து விட்டது. சிறிலங்காவின் தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவருக்குப் பிரதான போட்டியாளராக இருந்த அநுராபண்டாரநாயக்க தனது தந்தை, தாய், சகோதரி ஆகியோர் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கட்சிக்காகவும், நாட்டிற்காகவும் ஓர் அர்ப்பணிப்பைச் செய்துள்ளதாக எட்டாத பழத்தை கைவிட்டுவிட்டு குடும்பப் பெருமை பேசியிருக்கிறார்.

இருந்த போதிலும் அடுத்த நிலையிலுள்ள பிரதமர் பதவிக்கு ஓர் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டே இதனைக் கைவிட்டிருக்கிறார்.



மகிந்தராஜபக்ஷ

"கட்சி பிளவுபடும் வகையில் செயற்படக்கூடாது" என்பதற்காகவேதான் சனாதிபதி வேட்பாளர் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அவர் கூறியிருப்பதானது, அவர் அவ்வாறு போட்டியிட்டிருந்தால் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டிருக்கும் என்பதை வெளிப்படுத்துகின்றது. ஆனால் அண்மையில்தான், தாங்கள் இருவருக்கும் இடையில் மட்டுமல்ல தங்களது குடும்பங்களுக் கிடையிலேயே நீண்டகால நட்பு இருப்பதாக இருவரும் ஒருமேடையில் பேசிக் கொண்டனர்.

உண்மையில் இரு குடும்பங்களுக்கு இடையிலுள்ள நட்புறவும் நீண்ட காலமாக - அதாவது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்ப காலம்



தொடக்கம் இவ் இருகுடும்பங்களும் அக்கட்சியில் இருந்து வந்தமைதான் இந்தப் போட்டிக்கே அடிப்படையாக இருந்தது.

ஆனால் பண்டாரநாயக்க குடும்பம் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க அவரது மரணத்துக்குப் பின் மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க, பின்னர் சந்திரிகா என உயர் அதிகாரத்தில் இருக்க, மகிந்த ராஜபக்ஷவின் குடும்பம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வாக்குகளைத் திரட்டி பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சுப் பதவிகள் அமைச்சுப் பதவிகள் வரையே வரமுடிந்தது.

அடுத்த நிலையிலுள்ள பிரதமர் பதவிக்கு வர மகிந்த ராஜபக்ஷ கட்சிக்குள் பண்டாரநாயக்க குடும்பத்துடன் போராட வேண்டியநிலை ஏற்பட்டது.

ஏனெனில் பண்டாரநாயக்க என்ற பெயர் ஒட்டிக்கொண்டிருக்கும் அநுரா என்பவரைத் தாண்டியே அவர் அடுத்த பதவி நிலைக்கு வரவேண்டியிருந்தது.

பண்டாரநாயக்க குடும்பத்திற்கு கம்பகா மாவட்டம், எவ்வாறோ அவ்வாறே ராஜபக்ஷ குடும்பத்திற்கு அம்பாந்தோட்டை மாவட்டம். இவரது தந்தை டி.ஏ.ராஜபக்ஷ 1947 இலிருந்து 1960 வரை அந்த மாவட்டத்தின் பெலியத்த தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். மிகக் குறைந்த வயதுப் பாராளுமன்ற உறுப்பினராக இவரது தந்தை தெரிவானபோது மகிந்த ராஜபக்ஷவுக்கு வயது இரண்டு. அதே தொகுதியில் 1970 ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மகிந்த ராஜபக்ஷவின் தந்தையார் 1956 இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி சிறிலங்கா சுதந்திரக்கட்சியை அமைத்தபோது அவருடன் இணைந்து கட்சியை வளர்த்தவர்.

அதேவேளை மகிந்தவின் தந்தையாரின் சகோதரரான டி. எம். ராஜபக்ஷவும் 1936 இல் அம்பாந்தோட்டையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரேயொரு மக்கள் பிரதிநிதியாக இருந்தார். டி. எம். ராஜபக்ஷவின் மகன் ஜோர்ஜ் ராஜபக்ஷ 1960 ஆம் ஆண்டு முதல் 1976 இல் இறக்கும் வரை அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ளார்.

1994 இல் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தின்போது மகிந்த ராஜபக்ஷ அவரது தம்பி கமல் ராஜபக்ஷ, ஜோர்ஜ் ராஜபக்ஷவின் மகளான நிருபாமா ராஜபக்ஷ ஆகிய மூன்று சகோதரர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இவ்வேளையில், பண்டாரநாயக்க குடும்பத்திலும், சனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கவும், ஆனால் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினராக அநுராபண்டாரநாயக்கவும் அங்கம் வகித்தனர். இவ்வாறு அரசியல் ரீதியாக இவ்விரு குடும்பங்களும் பலம் வாய்ந்தவையாக இருந்த போதும் பண்டாரநாயக்க குடும்பத்தினர் உயர் பதவிகளில் இருக்கமுடிந்தளவுக்கு ராஜபக்ஷ குடும்பத்தினரால் முடியவில்லை.

இதேவேளை சிறிலங்காவின் அரசியலில் பௌத்த மதமுட் தத்துறவிகளும் வகிக்கும் செல்வாக்கு தெரிந்ததொன்றே. இவ்வாறு பார்க்கும்போதும் மகிந்தராஜபக்ஷவின் குடும்பம் பௌத்த மதபீடங்கள் மத்தியில் செல்வாக்கு மிக்கதாகவே காணப்படுகின்றது.

இதற்குச் சான்றாகக் கூறுவதானால் அரசுத் தலைவியாக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவிற்கு கண்டி மல்வத்த பீடாதிபதியால் "சிறிறோகண ரஞ்சன" விருது வழங்கப்பட்டது. அதாவது பௌத்தசிங்கள மக்களுக்கு ஆற்றிய தொண்டுக்காக இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

ஆனால் அரசாங்கத் தலைவராக பதவி ஏற்க முன்பே 2000 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவுக்கு "சிறிறோகண ரஞ்சன" விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதாவது ராஜபக்ஷ குடும்பத்தினர் பௌத்த மதத்திற்கும் சிங்கள மக்களுக்கும், பொதுவாக நாட்டிற்கும் செய்த சேவைக்காக இவ்விருது வழங்கப்பட்டது.

இந்த விருது வழங்கும் வைபவத்தில் உரையாற்றிய மல்வத்த பீடாதிபதி சிறி விபசி தேரர் மகாவம்சத்தில் ராஜபக்ஷ பரம்பரை பௌத்த மதத்திற்கும் விகாரைகளுக்கும் ஆற்றிய தொண்டுபற்றி கூறப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷ பொதுவாக தொழிலாளர் நலன் தொடர்பான செயற்பாடுகளில் அக்கறை செலுத்துபவராக இருந்திருக்கிறார். அந்த அமைச்சிலிருந்து அவர் எவ்வாறு சேவையாற்றியிருப்பினும் அம்பாந்தோட்டை மாவட்டம் அவரது குடும்பத்தில் வலுவான கோட்டையாக இருந்து வந்திருக்கின்றது.

எனினும் இடையிலே குடும்பத்தினருடன் கோபித்துக் கொண்டு எதிர்க்கட்சிக்குச் சென்று பின்னர் தாயாரின் மரணத்தின்பின் மீண்டுவந்த தம்பியார் அநுராபண்டாரநாயக்கவுக்காக பிரதமர் பதவியைப் பாதுகாத்து வழங்கி பின்னர் சனாதிபதியாக்கிவிட சனாதிபதி சந்திரிகா கடும் முயற்சிகளை மேற்கொண்டார்.

எனினும் கட்சியின் பிராந்திய மட்டங்களிலும் சரி உயர்பீடத்திலும்சரி அநுராபண்டாரநாயக்கவைவிட மகிந்த ராஜபக்ஷக்கு இருந்த செல்வாக்கானது அவரை சனாதிபதி வேட்பாளராகும் வரை கொண்டுவந்து விட்டுள்ளது.



சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு செல்வாக்கு மங்கும் நிலையில் செல்கையில் அதனைச் சற்றேனும் தூக்கி நிறுத்தக் கூடிய வலு அநுராபண்டாரநாயக்கவுக்கு இல்லை என்பது அவரது தீவிர அனுதாபிகள் உட்பட அனைவருக்கும் நன்கு தெரியும்.

இன்றுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறந்த போட்டியாளராக சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள ஒரேயொருவர் மகிந்த ராஜபக்ஷவே.

இப்போது மகிந்த ராஜபக்ஷவுக்கும் கட்சிக்கு ஏற்பட்டுள்ள பல சரிவுகளை நிமிர்த்தவேண்டிய தேவை இருக்கின்றது. குறிப்பாக கடந்த பத்து வருடங்களாக கட்சி குறிப்பிடத்தக்க சாதனை எதனையும் செய்துவிடவில்லை. கடந்த தேர்தலின்போது ஜே. வி. பி. யுடன் இணைந்து போட்டியிடுவது என முடிவு செய்ததால் இன்று சிறுபான்மை அரசாங்கமாகியிருக்கும் நிலை, 15 மாத ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பின்னடைவுகள், குறிப்பாக சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவும் செய்ய முடியாதநிலை இன்னமும்கூடத் தொடர்வது, கடந்த தேர்தலின்போது வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தாமையால் தென்பகுதி மக்கள் கொண்டுள்ள சீற்றம் என்பவற்றிலிருந்து தப்பவேண்டிய நிலை மகிந்த ராஜபக்ஷவுக்கு உள்ளது.

அதேவேளை 11 வருடகால ஆட்சியில் சலிப்புற்றிருக்கும் மக்கள் எதிர்க்கட்சியைத் தெரிவு செய்யவே வழமையாக முனைவர். இது ரணிலுக்குச் சாதகமான அம்சமாக இருக்கின்றது.

மேலும் பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திட்டதைச் சாட்டாக வைத்து ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி என்பன தூண்டிவிட்டுள்ள எதிர்ப்பலையானது மகிந்த ராஜபக்ஷவிற்கு பாதகமானதாகும். இந்நிலையில் அவர் பௌத்த பேரினவாதிகளைத் திருப்திப்படுத்த ஏதாவது செய்ய வேண்டியிருக்கும். ஆனால் அதற்கான அதிகாரம் அவர் கையில் இல்லை.



அநுரா

எனினும் ஜே.வி.பி, ஜாதிகஹெல உறுமய போன்றவற்றைத் திருப்திப்படுத்த அவர் முயலக் கூடும். ஆனால் கடந்த 14 மாத கால அனுபவம் அவருக்கு அச்சுறுத்தலாக இருக்கும். ஏனெனில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இவர்கள் ஆட்டிப்படைத்தமையை சனாதிபதி சந்திரிகா வுடன் நேரிலிருந்து பார்த்திருக்கிறார்.

அதாவது இனப்பிரச்சினை தொடர்பில் மட்டுமல்லாது வேறு அடிப்படை விடயங்களில் கூட முரணானவர்களின் கூட்டுச் சேர்ந்து அனுபவித்தவற்றை சந்திரிகா வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டு அத்தவறை மீண்டும் செய்ய வேண்டாமென்று கேட்டிருக்கிறார்.

இதேவேளை இவர்மீது ஊழல் குற்றச்சாட்டுகள் இதுவரை காலமும் சுமத்தப்பட்டதில்லை. அலலது வெளிப்பட்டதில்லை. ஆனால் அம்பாந்தோடடை நிதியம் இதற்கு மாறானதாக அமைந்திருக்கின்றது.

## வேலவன்

எவ்வாறாயினும் மனப்பூர்வமாக இல்லாவிடினும் தவிர்க்கமுடியாது, சனாதிபதி சந்திரிகாவே அடுத்த சனாதிபதி வேட்பாளராக தன்னை அறிவிக்குமாறு செய்வதற்கு மகிந்த ராஜபக்ஷவினால் முடிந்திருப்பது அவருக்குப் பெரும் வெற்றியே.

இதன்மூலம் சனாதிபதி சந்திரிகா தலைவராகத் தொடர்வார் என அறிவிக்கப்பட்ட போதும் பண்டாரநாயக்க பரம்பரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலக்கி வைக்கப்படுகின்றது.

சனாதிபதித் தேர்தல் என்பது அடுத்த பரீட்சைக் களமாக ராஜபக்ஷ குடும்பத்தின் முன் நிற்கிறது.

# உறவுகளை இழந்த சிறுவர்களுக்கு புதிய வாழ்வளிக்கும் "புனித பூமி"


இயக்குநர் இயல்வாணன்

கோடை வெய்யில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. அந்த வெய்யிலில் நீண்ட தூரப் பயணம் எம்மை களைப் படையச் செய்திருந்தது.

முத்துஐயன்கட்டு கிராமத்தை நெருங்கியதும் அந்த பசுமையான வயல்வெளிகளூடாக வந்த காற்று கோடை வெய்யிலின் கொடுமையைத் தணித்தது.

இயற்கையான எழில் அழகை தன்னகத்தே கொண்டு வயலும் வயல்சார்ந்த பிரதேசமுமாக நெற்பயிர்கள் பச்சைப் பசேலென பசுமை விரிந்திருக்க வயல் வெளிகளுக்குச் செல்லும் நீர்வாய்க்கால்களில் நீர் பாய்ந்து கொண்டிருந்தது.

இந்த இயற்கையான கொடையே அக்கிராமத்தில் குளிர்ச்சியை வீசிக்கொண்டிருந்தது. ஒருவகையில் இந்த ரம்மியமான இயற்கை சூழலில் சுகந்தமான காற்றை சுவாசித்து வாழக் கொடுத்துவைத்த இக்கிராமத்தவர்கள் பாக்கியசாலிகளே.

முல்லை மாவட்டத்தின் முக்கியமான குளங்களில் ஒன்றான முத்துஐயன்கட்டுக்குளம் இம்மாவட்டத்தில் உள்ள ஏனைய குளங்களை விடவும் தனக்கே உரித்தான சிறப்பு அம்சங்களை, இயற்கை அழகை தாங்கி நிற்கின்றது. இதனால்தானோ என்னவோ மங்கள நிகழ்வுகளைபதிவு செய்யும் ஒளிநாடாக்கள் தனக்குள் இந்த இயற்கை அழகையும் உள்வாங்கிக் கொள்கின்றன.



பல்வேறு காரணங்களால் தமது எதிர்காலமே இருளாகிவிட்டது என்ற நிலையிலுள்ள ஆண் சிறுவர்களை தன்னகத்தே உள்வாங்கி அவர்களுக்கு நல்ல ஒரு வசந்தமான எதிர்காலத்தை காட்டுவதற்காக "புனிதபூமி" சிறுவர் இல்லமும் இந்தக் கிராமத்திலே தன்னை நிலைநிறுத்திக்கொண்டுள்ளது.

ஒருவகையில் இந்த இல்லம் இங்கு அமைக்கப்பட்டமையே எட்டப்படவேண்டிய இலக்கில் பெரும்பகுதி எட்டப்பட்டதற்கான தீர்வாகும்.

ஏனெனில் பல்வேறு மன நெருடல்களைத் தாங்கியவண்ணம் தமது வாழ்வை உச்சமடையச்செய்ய வேண்டும் என்ற நோக்கில் இங்குள்ள சிறுவர்களுக்காக அமைக்கப்பட்ட "புனிதபூமி" அமைந்துள்ள சூழலும் மிக மிக ரம்மியமாகவே இருந்தது. அந்தவகையில் அந்த இடத்தினைத் தெரிவு செய்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் பெருமைக்குரியவர்கள்.

புனிதபூமி சிறுவர் இல்லம் தொடர்பாக ஒரு சிறு கருத்துப் பகிர்வினை அதன் இயக்குநர் இயல்வாணன் வழங்குகின்றார்.

மாணவர்கள் எதிர்பார்த்து வந்தவையாவும் இங்கு உண்மையாகவே நிறைவேறுகின்றது.

சுனாமி பேரனர்த்தம் உட்பட பல்வேறு வகையில் பெற்றோரை இழந்த ஆண் பிள்ளைகள் இங்கே இருக்கின்றார்கள். அவர்களை உண்மையிலேயே நாமெல்லோரும் தாய், தகப்பன் போல் அரவணைத்து கவனித்துவருகின்றோம்.

இங்கு இந்தப் பிள்ளைகளின் மிக முக்கியமான நோக்கம் கற்றல் ஆகும். இதற்கான சகல ஏற்பாடுகளும் பூரணமாக செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இதனைவிட விளையாட்டு ஊக்குவிப்பு, தொழில் பயிற்சி ஊக்குவிப்பு என்பனவும் இங்கு அவர்களின் வயது, தகுதி நிலைக்கேற்ப வழங்கப்படுகின்றது.

இந்தப் பிள்ளைகளைப் பார்க்கவரும் உறவினர்கள் பலரும் இவர்களின் முன்னேற்றத்தினையும், வளர்ச்சியினையும் கண்டு அவர்களைக் கட்டித்தழுவி ஆனந்தக் கண்ணீர் வடித்ததை நாம் பார்த்திருக்கின்றோம். பிள்ளைகளின் குடும்பநிலையையும், அவர்கள் இங்கு அனுபவிக்கும் வசதி வாய்ப்புக்களையும் பார்க்கும்போது தமக்கு ஆனந்தக் கண்ணீர் வருகின்றதென அவர்கள் தமது வாயாலேயே கூறிச்சென்ற சம்பவங்களும் உண்டு.

இந்தச் சிறுவர்களை நன்றாக கல்வி கற்க வைத்து இவர்களுக்கென்று ஒரு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுத்து அவர்களை முன்னேற்றிவிடுவதே எமது நோக்கமாகும். அவர்கள் எவ்வளவு தூரம் கல்வியில் முன்னேற்றம் அடைகின்றார்களோ அதுவரை அவர்களை முன்னேற்றி விடுகின்றோம்.

கணனிப் பயிற்சி, இயந்திரத்திருத்தம், மின்சுற்று இணைப்பு பயிற்சி, தையல், தச்சுவேலை உட்பட பல்வேறுபட்ட தொழிற்பயிற்சிகள் இங்குள்ளவர்களுக்கு அவர்களின் நிலைகளுக்கேற்ப வழங்கப்படுகின்றது.

தற்போது நவீன காலத்திற்கேற்ப கணனிப் பயிற்சி வழங்குவதில் தீவிர அக்கறை காட்டி வருகின்றோம். அவர்களும் எதிர்பார்த்ததைவிட முன்னேற்றம்கண்டுவருகின்றனர்.

தற்போதைய திட்டத்தின்படி போதுமான அடிப்படை வசதிகள், ஆளணி வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் போதுமான அளவு காணப்படுகின்றன.

இங்கு எனக்கு முதல் இருந்த நிர்வாகிகள் திட்டமிட்டு இந்த இல்லத்தினை கட்டியெழுப்பியுள்ளனர். அதனால் தற்போது பணிகளை இலகுவாக செய்யக்கூடியதாகவுள்ளது.

இந்த மாணவர்கள் பல சாதனைகளைப் படைத்துள்ளார்கள். பல்வேறு துறைகளிலும் பல பதக்கங்களை வென்றுள்ளனர். தேசியமட்ட ரீதியான பல போட்டிகளிலும் இவர்கள் சாதனைகளை நிலைநாட்டியுமுள்ளனர்.




இங்கு பணியாற்றும் ஆசிரியர்களும், ஏனைய பணியாளர்களும் தம்மை முழுமையாக அர்ப்பணித்து இந்த மாணவர்களுக்காகப் பாடுபட்டு உழைக்கின்றனர். அவர்களின் மனம் திறந்த சேவை இந்த நிர்வாகத்தால் நன்றியுடன் நோக்கப் படுகின்றது. இச்சிறுவர்களை வளர்க்க வேண்டும் என்பதில் இங்குள்ள ஆசிரியர்கள் பெரும் ஆவலாக இருக்கின்றார்கள்.

தற்போது 110 ஆண்பிள்ளைகள் இங்கு உள்ளனர். மேலும் புதியவர்கள் இனங் காணப்பட்டு இணைக்கப்பட்டு வருகின்றனர் எனத்தெரிவித்தார்.

இவ்வில்லத்தில் இருந்து பயனடையும் மாணவரான சிவசுப்பிரமணியம் கஜேந்திரன், (வண்ணாங்குளம், முல்லைத்தீவு) என்பவர் இவ்வாறு கூறுகின்றார்.

சுனாமியில் அம்மாவும், அக்காவும் இறந்துவிட்டனர். இதனை நினைத்துப் பார்க்கும்போது மனதில் ஆழமான கவலை எழும். ஆனால் இங்கு இந்த வசதிவாய்ப்புக்களுடன் சகல மாணவர்களுடனும் இருந்து கல்வி கற்று ஒற்றுமையாக விளையாட்டுக்களில் ஈடுபடும்போது அந்தக் கவலைகள் யாவும் பறந்துவிடுகின்றன.




எனது எதிர்கால இலட்சியம் இங்கு நன்றாக கல்வி கற்று ஆளுமையுடைய ஒரு சமுதாயத்தை உருவாக்கும் ஆசிரியராக வரவேண்டும் என்பதே ஆகும் என்றார்.

**கம்ஷிகா சுகுமார்**

---

## களவாடப்பட்ட வாகனத்துடன் வவுனியாவில் ஆறுபேர் கைது!

(வவுனியா

தெற்க்ல் களவாடப்பட்ட வாகனத் வன்னிப் பகுதிக்குள் கொண்டு செல்ல முயன்ற ஆறு பேரை வவுனியா பொலிசார் கைது செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

25 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியை உடைய சொகுசு வாகனம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்களும் வவுனியா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். வாகனத்தைப்பொறுப்பேற்க வந்தவர்களும் கொழும்பில் இருந்து வாகனத்தை கொண்டு சென்றவர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின்போது இந்த வாகனத்தை பத்து இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யத் தீர்மானித்தமை கண்டறியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆசிரிய இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

2006 ஆம் ஆண்டிற்கான ஆசிரிய இடமாற்றத்திற்கான விண்ணப்பங்களை வடக்கு -கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் இ. விசாகலிங்கம் கோரியுள்ளார்.

2006 ஆம் ஆண்டில் வலயத்திற்குள்ளான இடமாற்றங்கள், வலயங்களுக்கிடையிலான இடமாற்றங்கள், மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றங்கள், மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றங்கள் என்பவற்றிற்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சகல இடமாற்றங்களுக்குமான விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக அதிபர் ஊடாக வலயக் கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ. விசாகலிங்கம் அறிவித்துள்ளார். (10)

## விவசாயக் குழுக்கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை பத்து மணிக்கு வவுனியா அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா அரச அதிபர் சி. சண்முகம் தலைமையில். நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் வன்னி புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் றிசாத் பதியுதீன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சதாசிவம் கனகரட்ணம், வினோநோகராதலிங்கம், சிவநாதன் கிஷோர் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் பத்தாயிரம் கிராமிய நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களின் புனரமைப்பு, நியாப் திட்ட முன்னேற்றம், விவசாயக் காப்புறுதி கால்நடை அபிவிருத்தியும் சுகாதாரமும், கமக்காரர் அமைப்பு, நன்னீர் மீன்பிடித் திட்டம் பாவற்குளம் பயிர்ச் செய்கை, பயிர் உற்பத்தித் திட்டம், மரநடுகைத் திட்டம் உட்பட பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன. (10)

## வாழ்வாதாரத்தை உயர்த்த உதவி

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட கரையோரப்பகுதி மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கும் திட்டம் ஒன்றை திருகோணமலை எஹெட் கரித்தாஸ் அமைப்பு திருகோணமலையில் கடந்த வியாழக்கிழமை அங்குரார்ப்பணம் செய்தது.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு33 படகுகள், 33 வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் மீன்பிடிவலைகளை வழங்கும் திட்டத்தின் கீழ் முதலாவது தொகுதி மீன்பிடிப்படகுகள், இயந்திரங்கள், வலைகள் வியாழக்கிழமை திருமலை எஹெட்கரித்தாஸ் அமைப்பின் வெளிக்கள அலுவலக வளவில் வைத்துப் பயனாளிகளுக்குக் கையளிக்கப்பட்டன.

நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக எஹெட் கரித்தாஸ் பணிப்பாளர் வண பிதா எப் எக்ஸ். டயஸ் பங்குபற்றினார். ஜமாலியா, லிங்கநகர், சிறிமாவோபுர பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அப்பகுதி மீன்பிடிக்கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவே படகுகள், இயந்திரங்கள் கையளிக்கப்பட்டன.

பொருட்களின் பெறுமதியில் 33 சதவீதமான பணத்தை,பயனாளிகள் தாங்கள் அங்கத்துவம் வகிக்கும் கூட்டுறவுச்சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தான் இவ் வாழ்வாதாரத்திட்டத்தை எஹெட் கரித்தாஸ் அமைப்பு செயற்படுத்துவதாக நிகழ்வில் பங்குபற்றிப்பேசிய திட்டமுகாமையாளர் றோலண்ட் ஹேர்லிமான் தெரிவித்தார்.

## நிதிஒதுக்கீடு

அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்தியக்கருவித்தொகுதி ஒன்றைக் கொள்வனவு செய்ய வன்னி மாவட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் பாண்ட் வாத்தியக்கருவித் தொகுதியை கொள்வனவு செய்வதறகாக 145,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (10)

# சனாதிபதித்தேர்தல் தினத்தை அறிவிக்க மேன் முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தல் நடைபெறும் தினத்தை தேர்தல் ஆணையாளர் அறிவிக்கவேண்டும் எனக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டத்தரணி தர்மதாஸ இந்த மனுவை நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ளார்.

தற்போதைய சனாதிபதி 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி இரண்டாம் முறையாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டாரெனில் அடுத்த சனாதிபதித்தேர்தல் இந்த வருடம் இறுதியில் நடைபெற வேண்டும்.

எனினும் 2006 ஆம் ஆண்டில் தான் சனாதிபதித்தேர்தல் நடைபெறவேண்டுமென சில அரசியல் வாதிகள் கூறிவருவதால் இலங்கைப் பிரஜை என்ற அடிப்படையில் தமக்கு அடுத்த சனாதிபதித்தேர்தல் திகதியை தெரிந்துகொள்ளும் உரிமையுள்ளதாக சட்டத்தரணி தர்மதாஸ கோமஸ் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார். இந்த மனுவில் தேர்தல் ஆணையாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (32)

# உயர் நீதிமன்ற ஆலோசனையுடன் சனாதிபதித்தேர்தல்!

### சனாதிபதி சந்திரிகா முடிவு

(கொழும்பு)

சிறிலங்காவில் அடுத்த சனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டிய நாள் குறித்து உயர் நீதிமன்றின் ஆலோசனையைப் பெற சனாதிபதி சந்திரிகா முடிவு செய்துள்ளதாக சனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சனாதிபதித்தேர்தலை இவ்வாண்டில் நடத்துவதா? அல்லது அடுத்த ஆண்டில் நடத்துவதா? என்பது குறித்து ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையே வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையிலேயே அரசியல் அமைப்பின் பிரிவு 129(1) சனாதிபதிக்கு வழங்கியுள்ள அதிகாரத்திற்கமைய உயர் நீதிமன்றின் ஆலோசனையைப் பெற சந்திரிகா முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# அடையாள அட்டைக்கான வயதெல்லை 15 ஆக குறைப்பு

தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளும் குறைந்த வயது எல்லையை 15 ஆகக் குறைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைசசரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் கருத்துரைத்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கல்விப்பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு வாய்ப்பாக அமையும் வகையில் இந்தத் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை 2006 ஆம் ஆண்டுக்கான இலவச பாடநூல்களை அச்சிடும் பணிகள் தனியார்துறையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்காக தற்சமயம் 17 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என அவர் குறிப்பிட்டார்.இதுவரை காலமும் பாடசாலை இலவசப் பாடநூல்களை வெளியீட்டு திணைக்களமே அச்சிட்டு வந்தது. இந்த நிலையில் அதனை தனியாருக்கு ஒப்படைப்பது குறித்த காரணத்தை அமைச்சர் இவ் ஊடக மாநாட்டில் வெளியிடவில்லை. (32)


**நல்லூர் ஸ்ரீகந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2005**

**கால நீடிப்பு**

நல்லூர் ஸ்ரீகந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கால எல்லை. 2005.08.05 ஆம் திகதி பி.ப 2.30 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விபரங்களை அலுவலகத்தில் பார்வையிடலாம்
கேள்வி திறத்தல் 2005.08.05 ஆம் திகதி பி.ப 3.00 மணி

ஒப்பம்: கலாநிதி க. குணராசா
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி.12468)

**WANTED DYNAMIC YOUNG WOMEN AND MEN. COME! JOIN US,**
*Ladies and Gentlemen*
WE ARE BUNCH OF EXPERTS IN CONSTRUCTION INDUSTRY. LOOKING FOR EXPERIENCED/ NON EXPERIENCED CIVIL ENGINEERS/ ACCOUNTANTS/ADMINISTRATORS/AUTO CAD DESIGNERS FOR A CONSTRUCTION FIRM BASED IN VANNI.
THE EXPERTS WHO JOIN US WILL BE THE FIRST TO DO THE BEST.
SALARY NEGOTIABLE
FOOD AND ACCOMMODATION PROVIDED
WE WILL BUILD YOUR FUTURE, WHILE YOU BUILD THE NATION.
IF INTERESTED,SEND YOUR CURRICULAM VITAE TO:
C/O Eezhanatham
No-6505
Kilinochchi

(6505)

**பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்**
**வவுனியா**

**அறிவித்தல்**

**சக்கர நாற்காலி (Wheel Chairs) வழங்கல்**

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 80 ஆவது அவதார தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு/கிளிநொச்சி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சக்கர நாற்காலிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. எனவே சக்கர நாற்காலிகள் தேவையானோர் தமது விண்ணப்பத்தைக் கீழ் கண்ட முகவரிக்கு 2005.08.10 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர். முன்னுரிமை அடிப்படையில் இவைகள் வழங்கப்படும்.

தலைவர்,
பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம்,
பிரசாந்தி வீதி,
வவுனியா.

(சி.12392)

**வன்னியின் இறுதி மன்னன்**
**மாவீரன் பண்டாரவன்னியனின்**
**202ஆவது நிறைவு-நினைவு வெற்றிவிழாவைச் சிறப்பிக்கும்**

**கவிதை, கட்டுரை, ஓவியப்போட்டிகள் -2005.08.25**

01) மேற்படி போட்டிகள் யாவும் திறந்த போட்டிகளாக நடைபெறும்.
02) ஆர்வமுள்ளோர் பங்குபற்றலாம்.
03) கவிதை, கட்டுரைப் படைப்புக்கள் 15-08-2005இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
04) பங்குகொள்ளும் போட்டியாளர்கள் தமது படைப்புப் பிரதியில் சொந்தப் பெயர், முகவரி எழுதாது தனியான தாளில் எழுதி இணைத்துப் பாதுகாப்பான உறையில் இட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
05) ஓவியப் போட்டிப் பிரதிகள் யாவும் நேரடியாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.
06) முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு சான்றிதழும், பெறுமதியான பரிசில்களும் 25-08-2005 அன்று கற்சிலைமடுவில் நடைபெறும் விழா மேடையில் வழங்கிக் கௌரவிக்கப்படும்.
07) தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.

*போட்டி நிபந்தனைகள்:*

01) கவிதைகள்:-
தலைப்பு : "வன்னி மன்னவனின் சுகந்திர தாகம்"
கவிதைப் போட்டிகள் மரபுக் கவிதையாகவோ அல்லது புதுக் கவிதையாகவோ அமையலாம். ஒவ்வொரு வகையும் தனித்தனிப் போட்டிகளாகக் கணிக்கப்படும். கவிதைகள் புஸ்காப் தாளில் (கோட்டுத் தாள்) 60-80 வரிகளுக்குள் அடங்கல் வேண்டும்.

02) கட்டுரை:-
தலைப்பு: "அன்றைய பண்டாரவன்னியனின் வீரவேட்கையும், இன்றைய தமிழ் சமூகத்தின் விடுதலை வேட்கையும்"
ஆக்கங்கள் 800 சொற்களுக்குக் குறையாமலும்1000 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

03) ஓவியம்:-
பின்வரும் எண்ணக்கருக்களை உடையதாக இருத்தல் வேண்டும்.
01) பண்டாரவன்னியன் வாழ்க்கை வரலாறு தமிழர் பாரம்பரியத்தின் ஒரு மைல்கல்.
02) தமிழர் பாரம்பரியத்தில் இரண்டறக் கலந்திருக்கும் தமிழரின் வீரப் பண்பு வெளிக்கொணரப்படல் வேண்டும்.

குறிப்பு : ஓவியம் பிறிஸ்ரல் போட்டில் வரைந்து பொருத்தமான வர்ணம் தீட்டி அனுப்பல் வேண்டும்.

தகவல் : விழாக் குழு,
பிரதேச செயலகம்,
ஒட்டுசுட்டான்.

(சி-12345)

solidar | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH | Norwegian People's Aid

The Solidar Group – ASB (Arbeiter Samariter Bund), NPA (Norwegian People's Aid) and SAH (Swiss Labour Assistance) – is now recruiting experienced and qualified engineers for Phase III Reconstruction activity in the tsunami affected district of Jaffna (Vadamarachchi East). Solidar is committed to building more than 1,000 permanent homes and a range of associated community infrastructure, including fishing communities, playgrounds, preschools, community centres, water & sanitation and road building. Based in Kilinochchi, Solidar is now recruiting the following positions:

**Project Engineers**

Experienced Project Engineers are required to manage and implement housing and community construction projects in coordination with Senior Engineers and Building Site Managers. Vacancies currently exist for qualified personnel in the following areas:

- Housing Construction
- Road Construction
- Construction of Public Buildings
- Water & Sanitation

Successful candidates should have at least 3 years working experience, be familiar with the area of implementation, be fluent in English and Tamil and have experience with standard computer software.
Women are encouraged to apply.
The positions will be based in Kilinochchi.
Interested candidates should submit a CV and Cover Letter by email to: stevedurrant 2003@yahoo.co.uk.
Please indicate the position you apply for in the subject line.
Alternatively, submissions may be sent by mail to:

Mr. Florian Meyer
Programme Manager Construction
ASB/SOLIDAR Office
156, Jaffna Road
Paranthan, Kilinochchi

Deadline for applications is August 10th.
Only shortlisted candidates will be contacted.

(சி.12463)

# CARITAS - HUDEC JAFFNA

## VACANCY

**1. Field coordinator**

***Base Station : Mulaitivu***

**Main Duties:**

- Regular visits to monitor progress of programme activities and regular reporting back to senior Project Manager.
- Maintain regular contacts with local authorities (GA,AGA,GS) and community leaders.
- Assist in preparing activity reports as required and purchasing procedure.
- Monitor the distribution of all goods distributed to the select beneficiaries.
- Post based in Mulativu, with regular visits to Kilinochchi and Jaffna.

***Requirements:***

- NCT in Civil Engineering or equivalent with 3 years experience in the same field.
- Good analytical skill and field experience in Civil Site.
- Experience in Project Planning, Implementation, Monitoring and Evaluating.
- Excellent skill in monitorring implementation of program activities.
- Strong interpersonal and liaison skills.
- Computer literacy in Win Word, Excel and email software.
- Good knowledge of writen and spoken English and able to prepare Monthly Progress Report.
- Good team player.

**2. Field Officers**

***Base Station : Mulaitivu (3 Positions)***

**Main Duties:**

- Monitor the distribution of all goods distributed to the select beneficiaries.
- Assist in all programme implementation activities and inform the field coordinator of all the progress of the undertaken activities.
- Give regular information to the Field Coordinator or the Project Manager to whom he provides detailed and exhaustive news of the evolution of operations.
- Manage the skilled labor (masons, carpenters etc.)
- Fluency in Tamil & English.

***Requirements:***

- NCT in Civil Engineering or equivalent with 2 years experience in the same field.
- Experience in Implementation, Monitoring and Evaluating.
- Strong interpersonal and liaison skills.
- Computer literacy in Win Word, Excel and email software.
- Good team player.

**3. Logistician / Store keeper**

***Base Station: Mulaitivu***

**Main Duties:**

- Plan & Manage all activities related to procurement, transportation &storage of materials & equipment as necessary for program implementation.
- Assist the Purchasing Officer in preparing tender documents & receipt of quotation as necessary.
- Manage & maintain the warehouse according to professional standards & Hudec/Caritas guidelines.
- Ensure purchase Procedure are Respected & all procedure regarding the warehouse.

***Requirements:***

- Have excellent knowledge in Logistic field with 2 years experience.
- Strong interpersonal and liaison skills.
- Computer literacy in Win Word, Excel and email software.
- Planning and monitoring Logistics items.
- Knowledge in the contract and supplying of stock.

**4. Finance officer**

***Base Station : Mulaitivu***

**Main Duties:**

- Set up and maintain efficient finance systems to support Program Activities (filling.............)
- Prepare the vouchers and check all bills and forward to the Budget Controller as per requirement.
- Ensure cash book, bank book and petty cash book are maintained effcient and accurately in coordination with the Finance Controller.
- Preparing and entering **TALLY** software ledger books.

***Requirements:***

- Accurate accounting skills & background (ATT/CIMA) with 2 years experience in other organization.
- Knowledge in administrative organization and finance management.
- Computer skills.
- Honesty & transparency.
- Fluency in Tamil & English.

**5. Livelihood officer**

***Base Station : Mulaitivu (2 positions), Vettilaikerny (1 position)***

**Main Duties:**

- Ensure a high level of program quality in livelihood project design, implementation, monitoring and evaluation.
- Organize training & workshops to build & improve capacities of the above mentioned staff.
- Represent Caritas - Hudec on the issue of livelihood & income generating activities at district & divisional level coordination. meetings with government, NGO's UN orgnizations & the private sector.
- Professionalism, Integrity, Interpersonal skills, goal focus.
- Work with project offers to regularly monitor & evaluate livelihood programs (fisheries, agriculture. small enteprises)

***Requirements:***

- Demonstrate management experience with a special emphasis on project management related to micro - enterprise and income generating activites.
- Experiences using word processors, spread Sheets & email.
- Knowledge & experience working with participatory.
- Demonstrated knowledge in agriculture, fisheries & small enterprises sector.
- Fluency in Tamil & English.
- Good communication skills.

**6. Watchman**

***Base Section:*** *Mulaitivu (2 positions), Vettilaikerny (1 position)*

**Main Duties:**

- *Watch the overall compound (main building, store, garages, drivers room........) make sure the main gate is open between 6 hoo and 21n30 except special occasions.*
- *Receive any visitors and answer to their requeests - the coming of any visits should be announced to the offce by phone.*
- *Check everything is in order in the compund after working day and report any mistake to the logistic offcer to solve it if necessary.*
- *Maintain the cmpound clean. cleaning will be done on a daily basis.*

***Requirements:***

- *1 Year experience in the same field.*
- *Should be aware of any entrance of person in the compound.*
- *Minimum Enhlish skills.*
- *Professionalism, Integrity, Interpersonal skills, goal focus.*
- *strong interpersonol and liaison skills.*

***Carriers-Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religon or gender.***

***if you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV & motivation letter including your contacts & minimala two references to the following address, latest by.***

***15 August 2005***

***father Jeyakumar***
***caritas - Hudec Jaffna***
***14 Mathew's Road, Deogu Street,***
***Jaffna.***

***PLEAE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION WITH CONTACT TELEPHONE NUMBERS.***

(சி-12470)

## காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்கி 14 பேர் காயம்

ஸ்ரீநகரின் மையப்பகுதியில் அமைந்த இந்தியப்படையினர் முகாம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரின் மையப்பகுதியில் இந்திய எல்லைப் படையினர் முகாம் அமைத்து தங்கியிருந்த வேளை இந்த முகாம் மீது தீவிரவாதிகள் நேற்று முன்தினம் மாலை ஐந்து மணியளவில் திடீர் தாக்குதல் நடத்தினார்கள். தீவிரவாதிகள் வீசிய கைக்குண்டுபட்டு படையினரின் ஜீப் வண்டி தீக்கிரையானது.

சுதாரித்துக்கொண்ட இந்திய படையினர் தீவிரவாதிகளை நோக்கிச் சுட்டார்கள். இருதரப்பினருக்கும் இடையில் கடும்துப்பாக்கிச் சண்டை நடந்தது. அந்த சண்டையில் மூன்று எல்லைப்பாதுகாப்புப்படையினர், ஒரு பொலிஸார், ஆறு பத்திரிகையாளர்கள் மூன்று பொதுமக்கள் உட்பட 14 பேர் காயமடைந்தனர்.

## அத்வானியை பதவிவிலக கோரியதால் இந்திய நாடாளுமன்றத்தில் ரகளை

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்ட அத்வானி தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று மக்களவையில் மார்க்சிய கம்யூனிஸ்ட்டு மற்றும் லல்லு கட்சிகள் போர்க்கொடி தூக்கின. அதனால் எழுந்த பரபரப்பையடுத்து அவை ஒத்திவைக்கப்பட்டது.

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் பா.ஜ தலைவர் அத்வானி மீண்டும் சேர்க்கப்பட்டு ரேபரேலி தனி நீதிமன்றில் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும் நிலையில் இப்பிரச்சினையை மக்களவையில் மார்க்சிய கம்யூனிஸ்ட்டு உறுப்பினர்கள் மொகமது சலீம், வாசுதேவ் ஆச்சார்யா ஆகியோர் நேற்று முன்தினம் எழுப்பினார்கள்.

### சுனாமி வதந்தியால் மும்பையில் 18 பேர் பலி

மும்பையில் சுனாமி ஏற்பட்டதாக பரவிய வதந்தியால் மக்கள் முண்டியடித்துக்கொண்டு ஓடினார்கள். அப்போது ஏற்பட்ட நெரிசலில் 18 பேர் பலியானார்கள்.

கடந்த வியாழன் இரவு மும்பை ஜுகு பகுதியில் சுனாமி வந்துவிட்டதாக வதந்தி ஒன்று பரப்பப்பட்டது. இதை வதந்தி என்று அருகில் உள்ள மசூதியில் இருந்து அறிவித்தும்கூட நேருநகர் பகுதி மக்கள் கடற்கரை பகுதியில் இருந்து முண்டிஅடித்துக்கொண்டு ஓடினார்கள். நேரு நகரில் மழை வெள்ளம் காரணமாக மின்சாரம் தடைப்பட்டு இருள் பரவிக் கிடந்தது. இதனால் சிலர் இருட்டில் தடுமாறி விழுந்தார்கள். சிலர் நித்திரையில் இருந்தவர்களை மிதித்துக்கொண்டு ஓடினார்கள். இந்த நெரிசல் மற்றும் அமளியில் 18 பேர் பலியானார்கள். 20 பேர் காயமடைந்தார்கள்.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். நேருநகர் பகுதியில் வாழ்ந்தவர்களில் பெரும்பாலானோர் தமிழ்நாடு மற்றும் தென்இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் சுனாமி அனுபவம் கொண்ட தென்இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பதால் சுனாமி என்றதும் பீதியில் ஓட இந்த அசம்பாவிதம் நடந்துவிட்டது. அதுபோல மும்பையில் நேற்றுமுன்தினம் அணை உடைந்து வெள்ளம் பெருகியதாகவும் வதந்திகள் பரவின. அங்கு இது மேலும் பீதியை ஏற்படுத்தியது.

# மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டியில் தேசிய மட்டத்துக்குத் தெரிவானோர்!

கடந்தவாரம் வவுனியாவில் இடம்பெற்ற வடக்குகிழக்கு மாகாணமட்டப்போட்டியில் வெற்றிபெற்று தேசியமட்டபோட்டிக்குத் தெரிவான கிளி.மாவட்ட மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு;

இவ்விபரத்தில் மாணவர்களில் வெற்றியீட்டிய போட்டிகள் அவர்களின் நிலை என்பனவும் இடம்பெற்றுள்ளன.

ஆண்கள் 15 வயதுப்பிரிவில் ஈட்டி எறிதல் போட்டியில் கிளி/பளை மத்தியகல்லூரி மாணவன் வி.விதர்சன் மூன்றாமிடத்தையும் அதேபிரிவில் உயரம் பாய்தலில் கிளி/கண்டாவளை ம.வி.பா.தனுசாந் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

ஆண்கள் 17 வயதுப்பிரிவில் கிளி/அக்கராயன் அ.த.க பாடசாலை மாணவன் சி.மாதுங்கன் தட்டெறிதலில் நாலாம் இடத்தைப் பெற்றுள்ளார். அதேபிரிவில் கிளி/சிவநகர் அ.த.க பாடசாலையைச் சேர்ந்த நா.றஜீபன் முப்பாய்ச்சலில் மூன்றாம் இடத்தையும்,உயரம் பாய்தலில் நாலாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

19 வயது ஆண்கள் பிரிவில் கிளி/இந்துக் கல்லூரியைச் சேர்ந்த த.செல்வகுமார் குண்டெறிதலில் நாலாம் இடத்தையும், கிளி/அக்கராயன் ம.வி.யைச்சேர்ந்த இ.தவராசா நீளம் பாய்தலில் முதலாம் இடத்தையும் , 100 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும், 200 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

21 வயது ஆண்கள் பிரிவில் கிளி/தருமபுரம் ம.வியைச் சேர்ந்த . செ.செல்வறஜீபன் தட்டெறிதலில் நாலாம் இடத்தையும், அதேபிரிவில் உயரம்பாய்தலில் கு.கோபிநாத் இரண்டாம் இடத் தையும், முப்பாய்ச்சலில் பூநகரி நல்லூர் ம.வி யைச் சேர்ந்த த.இதயராஜ் மூன்றாம் இடத் தையும் பெற்றுள்ளனர்.

பெண்கள் நிகழ்ச்சிகளில் 15 வயதுப்பிரிவில் கிளி/சோரன் பற்று அ.த.க பாடசாலையைச் சேர்ந்த யோ.நிருஷா 100 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தையும், கிளி/கிராஞ்சி அ.த.க பாடசாலையைச் சேர்ந்த குகேஸ்வரி ஈட்டி எறிதலில் நாலாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

17 வயது பெண்கள் பிரிவில் அக்கராயன் ம.வி.யைச்சேர்ந்த சீ.தாரணி குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டிஎறிதல் ஆகிய மூன்று நிகழ்சிகளிலும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

19 வயது பெண்கள் பிரிவில் கிளி/இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வகுமாரி குண்டெறிதலில் நாலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

21 வயது பெண்கள் பிரிவில் கிளி/அக்கராயன் ம.வி யைச்சேர்ந்த க.றஞ்சனா 800 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தையும் 1500 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும் கிளிநொச்சி ம.வியைச் சேர்ந்த வி.நிலுஜினி 3000 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தையும் 800 மீற்றர் ஓட்டத்தில் நாலாம் இடத்தையும், கிளி/இராமநாதபுரம் ம.வி.யைச்சேர்ந்த சிறிமிதுலா உயரம் பாய்தலில் முதலாம் இடத்தையும் கிளிநொச்சி ம.வி.யைச் சேர்ந்த மா.கிறிஸ் ரீனா உயரம் பாய்தலில் மூன்றாம் இடத்தையும், கிளி/பாரதி அ.த.க பாடசாலையைச் சேர்ந்த கு.துஷ்யந்தினி குண்டெறிதலில் இரண்டாம் இடத்தையும், தட்டெறிதலில் நாலாம் இடத்தையும், கிளிபரந்தன் ம.வி யைச்சோந்த கி.ஜெயராணி தட்டெறிதலில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

அத்துடன் 19 வயது பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை மாணவிகள் இரண்டாம் இடத்தையும், பெண்கள் சதுரங்க விளையாட்டில் 15 வயதுப்பிரிவில் கிளி/வட்டக்கச்சி ம.வி முதலாம் இடத்தையும், ஆண்கள் சதுரங்க விளையாட்டு நிகழ்வில் 15 வயது பிரிவில் கிளி/ வட்டக்கச்சி ம.வி மாணவர்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். என்பது குறிபிடத் தக்கது. இவர்கள் தேசியமட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. (34)

## மாகாணமட்ட விளையாட்டுப்போட்டி

வடக்கு கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவி ஈட்டிஎறிதல் போட்டியில் முதலாவதாக தெரிவு செய்யப் பட்டுள்ளார். கடந்த வாரம் மூன்று நாட்களாக வவுனியா பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் கலந்து கொண்ட முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவி ச.சுவீதா 21 வயதுக் குட்பட்ட பிரிவில் ஈட்டி எறிதல் போட்டியில் முதலாமிடமாகவும், குண்டெறிதல் போட்டியில் நான்காம் இடமாகவும் தெரிவு செய்யப் பட்டு தேசிய மட்டபோட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

இதேவேளை மேற்படி நடை பெற்ற போட்டிகளில் சதுரங்கப் போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரி மூன்றாமிடமாக தெரி வாகி தேசிய மட்ட விளையாட்டுப்போட்டிக்கு செல்லவுள்ளது என மேற்படி கல்லூரிஅதிபர் கே.பி. கணேஸ் தெரிவித்தார். (ஆ)




## இறுதிப்போட்டியில் திருநகர், வலைப்பாடு அணிகள்





*வலைப்பாடு புனிதஅன்னம்மாள் ஆலயத்திருவிழாவை முன்னிட்டு வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அனுசணையுடன் பூநகரி பிரதேசவிளையாட்டுத்துறையினரால் நடாத்தப்பட்ட வணபிதா கொன்சலஸ் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இறுதியாட்டத்தில் கிளிநொச்சி திருநகர் அணியை எதிர்த்து ஆடிய வலைப்பாடு ஜெகமீட்பர் அணி 3-1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று வெற்றிக்கிண்ணத்தையும் பணப்பரிசையும் பெற்றுக்கொண்டது.*

## விளையாட்டு மைதானம் கையளிப்பு

இளையோர் செயற்பாட்டு நிறுவனமும் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்த செயற்திட்டத்தின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில் ஆகிய இடங்களில் விளையாட்டு மைதானம் கையளிக்கப்பட்டது.

வெற்றிலைக்கேணியில் இளையோர் விளையாட்டுக் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முதல் நிகழ்வாக பொதுச்சுடரினை முகாம் தலைவர் சி.லிங்கேஸ்வரன் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து அகவணக்க நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து மைதானப் பெயர்ப்பலகையினை இளையோர் செயற்பாட்டு நிறுவன வடமராட்சிகிழக்கு இணைப்பாளர் வி.மதி திரைநீக்கம்செய்து வைத்தார். இதன் பின் மைதானத்தினை கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கத் தலைவர் மு.சபாரத்தினம் நாடாவைவெட்டித் திறந்துவைத்தார். பின் விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. இதன் பின் கட்டைக்காடு, கேவில் ஆகிய இடங்களிலும் மைதானம் கையளிக்கப்பட்டது. (11)

## புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி பொன்விழா ஒழுங்கமைத்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு நடாத்தப் பட்டுவரும் கழகங்களுக்கிடையிலான 15 ஓவர் கொண்ட மென்பந்தாட்ட போட்டியின் இரண்டாம்நாளான நேற்றும் பல போட்டிகள் நடைபெற்றன.

முதலில் நடைபெற்ற கனகபுரம் அணிக்கும் உதிக்கும் திசை அணிக்கும் இடையிலான போட்டியில் முதலில் ஆடிய கனகபுரம்அணி ஏழு விக்கெட் இழப்பிற்கு 124 ஓட்டங்களை பெற்றது.

பிரதீபன்-32, கில்பேட் 22, ஓட்டங்களை முறையே பெற்றனர்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய உதிக்கும் திசை அணி 11.5ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 67 ஓட்டங்களை பெற்று தோல்வியடைந்தது. நிலவன் 11 ஓட்டங்களை பெற்றார்.

அடுத்து நடைபெற்ற பாரதி அணிக்கும் வித்தியா அணிக்குமிடையிலான போட்டியில் முதலில் ஆடிய பாரதி அணி 32 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய வித்தியா அணி நான்கு ஓவர் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. சரவணன் 18 ஓட்டங்களையும் சுகந்தன் 13 ஓட்டங்களையும் பெற்றனர். அடுத்து நடைபெற்ற மூன்றாவது போட்டி கனகபுரம் அளிக்கும் சென் அன்ரனீஸ் அணிகளுக்கிடையில் நடை பெற்றது. முதலில் ஆடிய சென்அன்ரனிஸ் 53 ஓட்டங்களை பெற்றது. டிலோஜன் 18 ஓட்டங்களைப்பெற்றார். வெற்றியிலக்கு நோக்கி ஆடிய கனகபுரம் அணி 8.4 ஓவரில் ஒ[illegible]துவிக்கெட்டுக்களை இழந்து வெற்றி யிலக்கை அடைந்தது. சுரேஸ் 25 ஓட்டங் களைப் பெற்றார்.

மேற்படி போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக குமார், சுபானந் ஆகியோர் [illegible]மையாற்றினர். இன்றும் போட்டிகள் [illegible]ர்ந்து நடைபெறும். (சு)

## பரபரப்பான ஒருநாள் போட்டியில் இந்தியாவை வீழ்த்தியது சிறிலங்கா






சிறிலங்காவில் நேற்று ஆரம்பமான மும்முனை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்போட்டியின் பரபரப்பான முதலாவது போட்டியில் சிறிலங்கா அணிமூன்று விக்கெட்டுக்களால் இந்திய அணியை வீழ்த்தியது.

தம்புள்ள ரிங்கிரி மைதானத்தில் பகல்-இரவாக நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ராவிட் 54 ஓட்டங்களையும்,வேணுகோபால்ராவ் 38 ஓட்டங்களையும், ஹர் பஜன்சிங் ஆட்டமிழக்காது 21ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் முரளிதரன் மூன்று விக்கெட்டுக்களையும், பெர்னாண்டோ இரண்டு விக்கெட்டுக்களையும், சந்தனா, சொய்சா, மஹ்ருப் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சிறிலங்கா ஆரம்பத்தில் இந்திய பந்துவீச்சாளர்களை எதிர்கொள்ளத் திணறியதுடன் விக்கெட்டுக்களையும்சொற்ப ஓட்டங்களுக்கு இழந்தனர்.

இந்த நிலையில் ஐந்தாவது வீரராக களமிறங்கிய ஜெயசூரியா சிறப்பாக ஆடி சிறிலங்கா அணியை தோல்வியில் இருந்து மீட்டார். இறுதியில் 47.2 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்துவெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஜெயசூரிய ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களையும் அத்தப்பத்து 29 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் ஹர்பஜன்சிங்மூன்று விக்கெட்டுக்களையும் ,சகீர்ஹான்,பதான் தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.



*சைப்ரஸ், நிகோசியாவில் நடந்த 'உய்பா கோப்பை ' கால்பந்துப் போட்டியில், பிர்கிர்கரா அணி வீரர்களிடம் இருந்து பந்தை லாவகமாகத் தட்டிச் செல்ல முனைகிறார் அபோயல் அணி வீரர் ஜார்ஜியோ (நடுவில்) இந்தப் போட்டியில் அபோயல் 4-0 என்ற கோல் கணக்கில் வென்றது.*

## தென்மராட்சி ரீதியிலான தாச்சிப் போட்டி குமரநகர் அணி சம்பியன்

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தென்மராட்சி ரீதியில் நடத்தப்பட்ட தாச்சிச் சுற்றுப் போட்டி அண்மையில் கைதடி தெற்கு சனசமூகநிலைய மைதானத்தில் நடைபெற்றது இவ் இறுதிப்போட்டியில் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கைதடி குமரநகர் விளையாட்டுக்கழகம் களமிறங்கியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் கைதடி குமரநகர் விளையாட்டுக்கழகம் 14.9 என்ற புள்ளி அடிப்படையில் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்றதன் மூலம் கைதடி சன சமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவுவிழா கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. (கீ)



*மாண்ட்ரியலில் நடந்த உலக நீர் விளையாட்டுப் போட்டிகளில், ஆண்களுக்கான 100 மீற்றர் பிரஸ்டிரோக் நீச்சல் பிரிவில் அமெரிக்காவின் பிரண்டன் ஹன்சென் தங்கம் வென்றார். அந்த மகிழ்ச்சி வேலையாள் பிரண்டள் வறக்சென்.*

## சிந்தனைக்கு



இன்றைய உலக ஒழுங்கைப் பலம் தான் நிர்ணயிக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 31.07.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## நிச்சயமற்ற நிலையில்---!

யாழ்.மாவட்டதிலுள்ள 75 சதவீதமான தனியார் நிறுவனங்கள் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் விதத்தில் செயற்படுவதாக யாழ்.மாவட்ட தொழில் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் கனகேஸ்வரனின் குற்றச்சாட்டு முற்றிலுமாக ஏற்புடையதே. மேலும் இது யாழ்.குடாநாட்டிற்கு மட்டுமல்ல, வடக்கு-கிழக்கின் அனைத்துப் பகுதிகளுக்கும் பொருத்தப்பாடானதொன்றாகும்.

வடக்கு-கிழக்கில் தனியார் நிறுவனங்களில் தொழில் புரிவோர் தமது தொழில் உத்தரவாதத்திற்கு நாளாந்தக் கூலித் தொழிலாளர்களிலிருந்து சிறிதளவில் மட்டுமே வேறுபடுகின்றனர். அதாவது கூலித் தொழிலாளர்கள் நாளாந்தம் உழைப்பதற்கான ஊதியத்தைப் பெறுகின்றனர். தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் வாராந்தமோ, அன்றி மாதாந்தமோ ஊதியம் பெறுகின்றனர் என்பது மட்டுமே வேறுபாடானது. இதனைத் தவிர ஊழியர்களின் தொழிலுக்கு உத்தரவாதமோ, உறுதிப்பாடோ இரண்டிலும் ஒன்றாகவே உள்ளது.

இதேவேளை இன்றைய நிலையில் நாளாந்த ஊதியம் எனப் பார்க்கும்போது கூலித்தொழிலாளர்கள் தனியார் நிறுவனங்களில் பணி புரியும் ஒருவரைவிடக் கூடுதல் ஊதியம் பெறுகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் பாதுகாப்பிற்கென பல்வேறு சட்டதிட்டங்கள் நடைமுறையில் இருக்கின்ற போதும் அவை எவையும் இத்தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பவையாக இல்லை. சுருக்கமாகக் கூறுவதானால் வடக்கு-கிழக்கில் தனியார் நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்கள் ஒரு தற்காலிக ஊழியர் போன்றே பார்க்கப்படுகின்றார். ஊழியர்கள் கூட அவ்வாறான [illegible]ர்வைக் கொண்டவர்களாகவே உள்ளனர்.

அதாவது முதலீட்டாளருக்குக் காட்டும் விசுவாசம், முதலீட்டாளர்களுக்கு ஈட்டிக்கொடுக்கும் வருமானம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே தனியார் நிறுவனங்களில் சேவை புரிபவரின் ஊதியம் உட்பட சகலதும் தீர்மானம் செய்யப்படுகின்றது. நேர்மையான உழைப்பு இருந்தாலும் முதலீட்டாளரின் விருப்பு வெறுப்பே ஊழியர் நிலைத்திருப்பதை உறுதி செய்வதாக இருக்கும்.

முதலீட்டாளருக்கு பணிந்து நடக்காதவர்கள், விமர்சனம் செய்கின்றவர்கள், தமது உரிமைகளை வலியுறுத்த முற்படுபவர்களுக்கு ஒரு சில தினங்களுக்குள்ளேயே அந்நிறுவனத்தின் கதவுகள் மூடப்பட்டுவிடும். அன்றிலிருந்து அவர் வேலையற்றவராகிவிடுவார்.

தமிழ்மக்களைப் பொறுத்து சிறியதொரு வேலையாயினும் அரச தொழிலை நாடுவதற்கு இத்தகையதொரு போக்கும் காரணமாகும். அதாவது தனியார் நிறுவனங்களில் வேலைபார்ப்பதானது நிரந்தர வேலையாகக் கொள்ளமுடியாததொரு நிலை காணப்படுவதே ஆகும். ஆகையினால் தனியார் நிறுவனங்களில் மதிப்புள்ள பதவிகளில் இருந்தாலும் அரச தொழில் சிறிய தொழிலுக்காக பழைய தொழிலை உதறிவிட்டு ஓடும் பழக்கம் உள்ளது.

தொழில் நிரந்தரமற்றது நம்பிக்கைத் தன்மை அற்றது என்பது மட்டுமல்ல தொழில்புரியும் போது கூட உரிய சம்பளம் வழங்குதல் தொழிலாளர்களுக்குரிய ஏனைய உரிமைகளை குறிப்பாக விடுப்பு, மேலதிக ஊதியம், ஊக்குவிப்புப்படிகள், தனியார் ஊழியர்களுக்கு அறிவிப்புச் செய்யப்படும் சம்பள உயர்வுகள், வசதிகள் வழங்கப்படுதல் போன்ற பல்வேறு விடயங்களில் தனியார் நிறுவன உரிமையாளர்கள் அக்கறை காட்டுவதில்லை.

அதிலும் குறிப்பாகத் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் மிகப்பெரும் சுரண்டலுக்குள்ளாகியுள்ளனர். மிகக்குறைந்த சம்பள மட்டம் உரிமையாளர்களின் அதட்டல், உருட்டல், ஏதோ தேவையற்ற இடத்திற்கு "பாவபுண்ணியம்' பார்த்து பணிபுரிய அமர்த்தியிருப்பது போன்றதொரு நிலை நீண்ட வேலை நேரம் எனப் பல்வேறு வகையில் பெண் ஊழியர்கள் பெரிதும் சுரண்டலுக்கும் ஒருவகை ஒ[illegible]க்கு முறைக்கும் உள்ளாக்கப்படுகின்றனர் என்பதே யதார்த்தமாக உள்ளது.

இவற்றிற்கு அப்பால் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களின் ஓய்வுகாலப்பகுதி(வயோதிபகாலம்)பெரும் கேள்விக்குரியதொன்றாகவே உள்ளது. அதாவது ஊழியர்களின் சேமலாப நிதியம், நம்பிக்கை நிதியம் போன்றவற்றை உரியமுறையில் செலுத்தாமை, அன்றி முற்றாகவே செலுத்தாமை, வயோதிபகாலத்தில் அவர்களைப் பாதுகாப்பற்றதொரு வாழ்க்கைக்குள் கொண்டு செல்கின்றது. இளமையில் ஓடி, ஓடி/ மாறி மாறி தனியார் நிறுவனங்களில் உழைப்பவர்கள் தமது முதுமையில் கையில் எதுவுமற்றவர்களாக வறுமையில் வாட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகின்றது.

இந்நிலையில் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் நிகழ்காலமும் சரி, எதிர்காலமும் சரி பெரும்பாலும் பாதுகாப் பற்றதொன்றாகவே உள்ளது. தற்போதைய சூழ்நிலையில் பெரும் தொழிலாளர் பற்றாக்குறை காணப்படுவதால் முதலீட்டாளர்கள் சற்று ஊழியர்களை அனுசரித்தபோக்கை கடைப்பிடிப்பினும் அது ஊழியர்களின் தொழிலுக்கானதும், வருவாய்க்கானதுமான பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதாக இல்லை. ஆகையினால் தனியார் நிறுவனங்களில் பணி புரிவோரினது தொழிலும், வருமானமும் எதிர்கால வாழ்வும் உறுதிப்படுத்தப்படும் வகையில் நடவடிக்கைகள் அவசியமாகின்றது. அத்தோடு தொழிலாளர்களும் தமது உரிமைகளைக் கோரிப்பெறவும் தயாராக இருத்தல் வேண்டும். ஏனெனில் இது உழைக்கும் மக்களின் அடிப்படையுரிமையாகும்.

*நீதிமன்றத்தை அவமதிக்காத வகையில்*

# பொதுக்கட்டமைப்பை அமுல்படுத்துவது பற்றி அரசின் நிலைப்பாடு புலிகளுக்கு அறிவிக்கப்படுமாம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பின் முக்கிய அம்சங்களுக்கு உயர்நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடையினால் எழுந்துள்ள நெருக்கடி நிலைமையைக் கருத்திற்கொண்டு நீதிமன்ற உத்தரவை அவமதிக்காத வகையில், சில திருத்தங்களுடன் பொதுக்கட்டமைப்பைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு புலிகளுக்கு அறிவிக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை வரும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனூடாகவே இந்தத் தகவல் அனுப்பிவைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். வாராந்த அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிப்பதற்காகத் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துரைத்த அவர் நோர்வே பிரதி வெளி விவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் எதிர்வரும் நான்காம் திகதி கொழும்பு வருகிறார். ஏழாம் திகதி வரை அவர் இலங்கையிலேயே தங்கியிருப்பார். இந்தக் காலப் பகுதிக்குள் அவர் கிளிநொச்சி சென்று புலிகள் இயக்க முக்கியஸ்தர்களையும் சந்திப்பார். பொதுக் கட்டமைப்புத் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு விதார் ஹெல்கேசனூடாக புலிகளுக்கு அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார். (32)

# மீண்டும் யுத்தம் ஏற்படுமாயின் வெளிநாட்டு உதவிகள் தடைப்படும்

## டெனிஸ் கண்ணிவெடியகற்றல் மேற்பார்வையாளர்

அரசிற்கும் புலிகளுக்குமிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த நிலையில் டென்மாாக் உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவ வந்திருந்தன. அந்நாடுகளின் உதவியின் கீழேயே இங்கு கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. எனினும் மீண்டும் யுத்தமொன்று ஏற்பட்டால் இவ்வாறான உதவிகள் தடைப்படும். அவ்வேளையில் கண்ணி வெடியகற்றும் பணிகளும் தடைப்பட்டுப் போகலாமென எச்சரித்துள்ளார் பொடில் ஜக் கோபசென் அம்மையார்

யாழ். மாவட்டத்தில் கண்ணி வெடியகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள டென்மார்க் நாட்டின் கண்ணி வெடியகற்றல் பிரிவான டெனிஸ் கண்ணிவெடியகற்றல் பிரிவின் நிகழ்ச்சித்திட்ட மேற்பார்வையாளராக அவர் கடமையாற்றி வருகின்றார்.

நேற்று யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்திற்கு விஜயம் செய்த அவர் ஊடக பயிற்சி மாணவர்களிற்கு தமது பணிகள் தொடர்பாக அங்கு எடுத்து விளக்கினார். அங்கு அவர் மேலும் விபரிக்கையில்;''இலங்கையில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளில் அதிகளவாக 44 வீதம் யாழ். குடாநாட்டிலேயே புதைக்கப்பட்டுள்ளன. அடுத்து கிளிநொச்சி பகுதியில் 19 வீதமும், மட்டக்களப்பில்13 வீதமும், மன்னார் பகுதியில் நான்கு வீதமும் புதைக்கப் பட்டுள்ளன.

டெனிஸ் கண்ணிவெடியகற்றல் பிரிவு இலங்கை, சோமாலியா, ஆப்கானிஸ்தான், ஈராக், இங்சென்யா போன்ற ஐந்து நாடுகளில் தனது பணிகளை முன்னெடுத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆழிப்பேரலை நிவாரண நிதி விவகாரம் மன்னிப்புக் கோரினார் பிரதமரின் செயலாளர்

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண நிதியை பிழையாகக் கையாண்டமைக்காக பிரதமரின் செயலாளர் லலித் வீரதுங்க பகிரங்கமாக மன்னிப்புக் கோரியுள்ளார்ரென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமரின் செயலாளர் அரச ஊடகத்தில் பக்கசார்பான பேட்டியை வழங்கிய போதிலும், யுனிலீவர் நிறுவனத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் பொதுமக்களின் நிதியை பிழையாகக் கையாண்டமையை ஏற்றுக் கொண்டுள்ளார்.

பிரதமர் குற்றமற்றவர்எனக் காட்டும் முயற்சியாக அரச தொலைக்காட்சி இந்தப் பேட்டி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த போதிலும் சில தவறுகள் நிகழ்ந்திருப்பதாக அவர் ஏற்றுக்கொண்டாரே தவிர குற்றச்சாட்டுக்களுக்கு அவரினால் பதிலளிக்க முடியாது போனது என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் அதன் பிரதிப்பொதுச்செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமரின் செயலாளர் வீரதுங்க வேண்டுமென்றே பதிலளிக்காத சில விடயங்கள் குறித்து இங்கு பிரதிச் செயலாளர் விளக்கமளித்தார்.

பிரதமரினதும்' அவரினது செயலாளரினதும் வாய்மூலமான உத்தரவிற்கமையவே தான் இந்த நிதியை வேறு கணக்கிற்கு மாற்றியதாக பிரதமர் அலுவலகத்தின் கணக்காளர் தெரிவித்திருக்கிறார்.

எனினும் பிரதமர் அவரை ஹெல்பிங் ஹம்பாந்தோட்ட கணக்கிற்கு பணத்தை மாற்றுமாறு கூறவில்லை என பிரதமரின் செயலாளர் கூறியுள்ளார் என தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் அது தொடர்பாக ஆவணங்களையும் ஊடகவியலாளர்களிடம் காண்பித்தார்.

சனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு நடத்தும் போராட்டங்கள் காரணமாகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்சனாதிபதித் வேட்டபாளராவதற்கு மகிந்த ராஜபக்ஷவிற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக் கப்பட்டுள்ளதனால் எதிர்வரும் டிசம்பர் மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் சனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் ஐக்கியதேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றி உறுதியானதாம்

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலை இந்த வருட இறுதிக்குள் நடத்துவது உறுதியானதொன்றென தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்தின, ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி உறுதிப் படுத்தப்பட்டுவிட்டதென கூறினார்.

நேற்றுமுன்தினம்மாலை ஆனமடுவ சுதம்பாய மண்டபத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர்களுக்கான கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் சிந்தனையினால் இந்த நாட்டில் சமாதான சூழ்நிலை காணப் பட்டது..

ஆனால் இன்று அந்த நிலை இல்லாத காரணத்தால் சனாதிபதித் தேர்தலொன்று நடத்தப்படுகின்ற போது சிறுபான்மைக் கட்சிகள் எமது கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவையே ஆதரிப்பார்கள் எனவும் அவர் கூறினார். (32)

## தெற்கில் இரு வீதி விபத்துக்கள் இரண்டு பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

மாதம்பே, ஹிங்குராங்கொடை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற இரண்டு வீதி விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். சிலாபம் மாதம்பே பிரதேசத்தில் நேற்றுக் காலை ஆறு மணியளவில் ஊனமுற்ற பெண் ஒருவர் வீதியைக் கடக்க முற்பட்ட போது சிலாபத்தில் இருந்து கற்கள் ஏற்றி வந்த பாரவூர்தி ஒன்று முதலில் மோதியதாகவும், பின்னர் வான ஒன்று மோதியதாகவும், இந்த விபத்தில் 75 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் இவர் எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என இது வரை தெரிய வில்லையென மாதம்பே பொலிசார் தெரிவித்தனர்.

இதே வேளை மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த புகையிரதத்துடன் கார் மோதியதால் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து ஹிங்குராங்கொடை ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள ரயில் கடவையில் இடம்பெற்றுள்ளது. ரயில் மோதியதில் கார் சுமார் 50 மீற்றர் தூரத்திற்கு மாதம்பே பொலிசார் தெரிவித்தனர். தூக்கி ஏறியப்பட்டது. காரில் பயணம் செய்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் இறந்துள்ளார்.

# திருமலையில் மூவாயிரம் சிறுவர்கள் பங்குபற்றும் "அருணொளி விழா"

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கடற்கோளினாலும் யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்ட மூவினங்களையும் சேர்ந்த சுமார் மூவாயிரம் சிறார்கள் பங்கு பற்றும் "அருணொளி விழா" என்ற பெயரிலான மாபெரும் ஒன்று கூடல் நேற்றுக்காலை திருகோண மலை மக்ஹய்சர் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட குச்சவெளி, கிண்ணியா, மூதூர், ஈச்சிலம்பற்று மற்றும் திருகோண மலைப்பட்டினமும் சூழலும் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த எட்டுத் தொடக்கம் பதினாறு வயதுக் குடபட்ட மூவாயிரம்சிறார்களும் மற்றும் வயது வந்தோரும் ஒன்று கூடலில் பங்குபற்றினர்.

சர்வதேச, உள்ளூர் அரச, சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புக்கள் அங்கம் வகிக்கும் திருகோண மலை சமூக வலுவூட்டல் வலைப் பின்னல் அமைப்பினால் அருணொளி விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

காலையில் இந்து , இஸ்லாமிய, கிறிஸ்தவ , பௌத்த மதகுருமார்கள் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். பின்னர் மூன்று இனங் களைச்சேர்ந்த சிறார்கள் சமாதான கீதமிசைத்தனர்.

திருமலை சமூக வலுவூட்டல் வலைப்பின்னல் அமைப்பின் தலைவர் டாக்டர் த. கடம்பநாதன் தலைமை யுரை நிகழ்த்தினார்.மூன்று மொழி களிலும் சிறார்கள் வரவேற்புரை நிகழ்த் தினர். அதன் பின்னர் சிறார்களின் உடற்பயிற்சி. விளையாட்டுகளும் இடம் பெற்றன.

அருணொளிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நிறைவு பெறுகின்றது. இன்றைய நிகழ்வின போது சிறார்களின் கலை கலாசார நிகழ்வுகள், கைவினைத்திறன் களைப் பொதுமக்கள் பார்வையிடு வதற்கு அனுமதிக்கப்படுவர் என்று அமைப்பாளர்கள் கூறினர்.

அருணொளி விழாவின் நோக்கம் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச்சேர்ந்த சிறுவர்களின் ஆற்றலை வெளிக்கொணருவதும் அவர்களின் தன்னம்பிக்கையை வளர்ப்பதுமேயாகும் என்று சமூக வலுவூட்டல்வலைப்பின்னல் அமைப் பின் தலைவர் டாக்டர் கடம்பநாதன் தெரிவித்தார். மேலும் வேறுபட்ட சமூகம், இனம், மதங்களைச்சாந்த சிறாரிடையே நல்லிணக்கம், புரிந்துணர்வு, சகிப்புத்தன் மையை வளர்ப் பதும் இந்த ஒன்று கூடலின அடிநாத மாக அமைவதாகவும் அவர் கூறினார். (25)



# சுதந்திரக் கட்சியின் யாப்பைத் ... உயர் மட்டக் குழு ஆராய்...

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சனாதிபதி வேட்பாளராக நிறுத் தியிருக்கும் சந்திரிகா குமாரதுங்க திடீர் நடவடிக்கையாக கட்சியின் யாப்பை திருத்துவது பற்றி ஆராய்ந்து வருகிறார்என சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்று முன்தினம் தெரிவித்தன.

சிறிலங்கா சுதந்திர... யாப்பைத் திருத்துவது... கட்சியின் முக்கிய உறு... ளுடன் ஆலோசனை நட... ருக்கும் சந்திரிகா இதற்... யான நடவடிக்கைக... மாறும் பணித்திருக்கிறா... விக்கப்படுகிறது.

# தமிழ் தேசிய இனத்தின் வரலாறு போராட்டத்தின் மூலம் பெறப்பட்டது

### யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

ஓர் இனத்துக்குரிய வரலாறு, போராட்டத்தின் மூலம் பெறப்பட்ட வரலாறாகவே இருக்கின்றது. இதே போன்று தமிழர் என்ற தேசிய இனத் தினுடைய வரலாறும் போராட்டத்தின் மூலம் பெறப்பட்டதாக அமைகின்றது என யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் கண்ணன் தெரிவித்துள்ளார்.

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் வெலிக்கடைச் சிறையில் சிங்கள பேரினவாதிகளால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட தாமு.கந்தையா உட்பட புத்தூர் கிழக்கு மாவீரர்கள், ஞாபகார்த்தமாக நடத்தப் பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில், எந்த ஒரு நாட்டிலும் ஒடுக்கப்பட்ட இனங்கள் தமக்குரிய விடுதலையைப் போராட்டத்தின் மூலமே பெற்று அதனையே வரலாறாகப் படைத்திருக் கிறன. அவ்வாறே எமது இனத்தினு டைய விடுதலையும் போராட்டத்தின் மூலமே பெறப்படும். இதனை எமது மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

எமது தேசியத்தலைவரின் சிந்த னைக்குச் செயல்வடிவம் கொடுக் கின்ற போராளிகள் உறுதுணை யாக இருக்கின்ற போது எவராலும் எமது போராட்டத்தை நசுக்க முடியாது. எமது மக்கள், எதிர்கால சந்ததியி னர் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற் காக மாவீரர்கள் தம்மையே தியாகம் செய்துள்ளார்கள். அவர்களின் கனவு நனவாக நாம் எல்லோரும் ஒன்றி ணைந்து எதிரியை விரட்ட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (கீ)

## திருத்தம்

நேற்றைய ஈழநாதம் நாளேட்டின் நாலாம்பக்கத்தில் இடம்பெற்ற "பாதிக்கப்பட்டவர்களின் நலன் கருதி அருணொளி ஒன்றுகூடல் நிகழ்வு" என்ற தலைப்பிலான செய்தியில் ஐந்தாவச[illegible]ரியில் மூவாயிரம் சிறுவ[illegible] பதுதவறுதலாக 30 சிற[illegible]ன இடம்பெற்றுள்ளது. [illegible]ருந்துகிறோம்.

## அமைதி...

முக்கியத்துவத்தினையும் இந்த வழக்கில் முன்னிறுத்தி வாதாடிய தையும் இந்தத் தீர்ப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையில் நடைபெற்றுவரும சமரசப் பேச்சுக் களில் சட்டபூர்வ ஆலோசனைகளை வழங்குவதற்கும் இலங்கை வாழ் தமிழர்களுக்கு அரசியல் ஆதரவு வழங்க விருப்பதாகவும் இந்த மையம் தனது வழக்கில் மேலும் குறிப்பிட்டி ருந்தது

சட்டத்தரணியும் ஜோர்ஜ் ரவுன் பல்கலைக்கழக சட்டத்துறை பேராசிரியருமான டேவிட் கோல்லே இந்த மையத்தின் சார்பாக வாதாடி யது இங்கு குறிப்பிடத்தக்கது.

தடைசெய்யப்பட்ட பட்டியலில் இந்த அமைப்புக்கள் இருப்பினும் , அவற்றின் அமைதி வழி நடவடிக் கைகளுக்கு சட்டபூ... வளிக்க உரிமை உ... நீதிமன்றம் ஏற்... பாராட்டுவதாக டே... இந்தத் தீர்ப்புத் தொட... கருத்தினையும் தெரிவி...

வெளிநாட்டு அ... தடைசெய்வதற்காக... தப்படும் அமெரிக்க... சட்டத்தின் சில சட்டப் பி... அமெரிக்க காங்கிரஸ் ... விளக்கமளிக்க முயற்சிக்... யென அமெரிக்க நீத... கொலின் லொஸ் ஏஞ்சல... நீதிமன்றத்தில் நேற்று மு... நடைபெற்ற வழக்கில் தீர்ப்ப... ளார்.

இந்தச் சட்டம் சாதார... கள் புரிந்துகொள்ளத்தக்க ... இயற்றப்பட... லை எனவு... மேலும் [illegible]த்துள்ளார்.

## தேசத்தினுடைய....

அதாவது ஒரு தலைமைத் துவத்தோடு சில உறுப்பினர்களைக் கொண்ட குழுவாகவும் அந்தக் குழுவின் கீழ் உப குழுக்களை அமைத்து ஒவ்வொருவிடயம் தொடர்பாகவும் அதாவது உளநலம் தொடர்பான கல்வி, பயிற்சி, உளநல சேவை, உளநல மேம்பாடு என்ற ரீதியிலே உபகுழுக்களை அமைத்து அந்த உபகுழுக்களுக்குள்ளே ஒவ்வொரு நிறுவனமும் பங்கு பற்றுகின்ற ஒரு நிலைமையை உருவாக்கி அக்குழுக்கள் அந்தந்த விடயம் தொடர்பான முழுமையான தயார்படுத்தல்களில் ஈடுபட்டு மாதாந்த ஒன்று கூடலிலே அவர்கள் அதை முன்வைக்க வேண்டும்.

அந்தக்குழு அதை ஏற்றுக் கொண்டு, அல்லது அது தொடர்பான இறுதி முடிவை எடுத்துக்கொண்டு செயற்படுத்த வேண்டும். அந்த நிலைக்கு வருகின்ற போதுதான் நாங்கள் பரந்துபட்ட பணிகளைச் செய்ய முடியும்.தற்போது ஒவ்வொரு நிறுவனமும் தன்னால் இயன்ற சேவையினை மட்டும் வழங்கிக் கொண்டு வருகின்றன. அதாவது அவசரகால நிலைமைகளிலே சில பயிற்சிகள் வழங்கப்பட்டன. சில நிறுவனங்கள் தொடர்சியான பயிற்சியை வழங்கிகொண்டு வருகின்றன.

அதேவேளை கடந்த காலங்களிலே உளநல சேவை நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற வகையில் முன்வைக்கப்பட்ட திட்டம் பாரிய திட்டமாக இருந்து பின்னர் [illegible]து பகுதியாகப் பிரிக்கப்பட்டு வேறு [illegible]னங்களுக்கும் திட்டமுன் மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையுமுள்ளது.

இன்னொருபுறமாக சர்வதேசத்திலிருந்து வரும் எமது தமிழ் உளநல நிபுணர்களின் உதவியோடு இவ் உளநல சேவை நிலையத்தை இயக்குவதற்காகவும், திட்டமிடுவதற்காகவும் தொடர்ந்து செயற்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு அங்கொன்றும இங்கொன்றுமாக செயற்பாடுகள் நடந்துகொண்டிருப்பதனாலே கடந்த காலத்தில் சில செயற்பாடுகள் பின்னடைய வேண்டிய நிலை உருவானது. அந்த வகையிலேயே தமிழீழ சுகாதார சேவைகளைப் பொறுத்த வரையிலே இந்த தேசத்தினுடைய நல மேம்பாடு தொடர்பான விடயத்திலே நாங்கள் மிகுந்த கரிசனையாக இருக்கிறோம்.

அதிலே உளநலம் என்பது மிக முக்கியமானது என்பதை உன்னிப் பாக அவதானித்து அதிலே மிகுந்த கரிசனை செலுத்தி வருகின்றோம்.

இருப்பினும் இந்த வகையிலே நல மேம்பாடு தொடர்பாக செயற்படும் ஒவ்வொரு பிரிவுகளுக்குமுரிய நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் பெருமளவு உருவாக்கப்படாததன் காரணத்தினால் நாம் இருக்கின்ற வளங்களை ஒருங்கிணைத்து அதனூடாக எங்களது தேசிய நலத்திட்டத்திற்கமைய சேவைகளை முன்வைக்கலாம் என்பதே எமது நோக்கமாக இருக்கிறது.

அந்த வகையிலே இன்று இருக்கின்ற அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து வேலைத் [illegible]ளை மேற்கொண்டுவருகின்ற இடைவெளிகளை இந்த இரண்டு பக்கங் களாலும் விடப்படுகின்ற இடைவெளி களை எங்களுடைய மக்களின் பலத்தைக் கொண்டு இயக்குகின்ற வேலைத் திட்டத்திலும் இறங்கியிருக் கின்றோம்.

அந்தவகையிலேதான் ஆரம்ப சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான சில அமைப்புக்களை நிறுவியிருக் கின்றோம். உளநல மேம்பாடுகள் தொடர்பாக வெளிநாடுகளிலிருந்து வரும் நிபுணர்களுடைய உதவி களோடு சில வேலைத்திட்டங்களை முன்வைக்க சில முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த காலங்களிலே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளவள பாதுகாப்பு சேவையினை ஒழுங்கமைப்பின்றி செய்ததனால் மக்களை மேலும் பாதிக்கும் என்ப தனால் அவற்றை ஒழுங்கமைச் கின்ற செய்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தோம் என்றார்.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு தமிழீழ திட்டமிடலுக்கும், மேம்பாட்டுக் குமான செயலகத்தில் நடைபெற்ற இவ் ஒன்று கூடலில் சமூகஉளவியல் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக அன்னை இல்லப் பணிப்பாளர் அருட்தந்தை ரெஜி னோலட் தெரிவு செய்யப்பட தொடர்ந்து உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டனர். இவ் ஒன்று கூடலில் உளநல பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வரும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் கலந்துகொண்ட அதே வேளை நலவாழ்வுஅபிவிருத்தி நிறுவன பணிப்பாளரும் கலந்து கொண்டார். (ச)

## இலங்கை...

மனிதாபிமான உதவிகளை வழங்கின. அந்த வேலைத் திட்டத் தினூடாக இலங்கையுடன் நல்லு றவைப் பேணியது போன்று விஜயமும் நல்லுறவைப் ... தற்கான சந்தர்ப்பமாக அ... என்றார்.

## எரிபொருள்..

மூன்றாம் கட்டையை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெற்றோல் நிரப்புவதற்காகத் தாங்கி ஒன்றில் வந்த இந்த இளைஞர்கள் எரிபொருளை நிரப்புவதற்... காத்திருந்த நேரத்திலேயே ... படம் எடுத்ததாகவும் நிறுவ... பாதுகாப்பு அதிகாரிகள் ... துள்ளனர்.

## ஏழு....

செய்யப்பட்டு இருப்பதாகவும் அந்தச் சிறுமிக்கு பாலியல் பலாத்காரம் புரிந்த நப... அடையாளம் காணமுடியும் ... பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## உள்ளூராட்சி...

தோறும் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்சியின் வேலைத் திட்ட[illegible]கள், புதிதாக அங்கத் தவர்களை சேர்த்துக்கொள்ளுதல், [illegible]க்கள் பிரச்சினைகளை அறிந்து அதற்கான பரிகாரங்களை ... போன்ற திட்டங்களை செய... துவது தொடர்பாக இந்தக் கூட்... அறிவூட்டல்கள் வழங்கப்... கவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேசியத்...

சேர்க்கப்படுகிறார்கள்-அதுவும் குறிப்பாக மட்டக்களப்பு பகுதியில் தான் இது போன்ற சம்பவங்கள் அதிகமாக நடைபெறுகின்றன என்று குறிப்பிடுகிறார்கள். இது பற்றிய உங்கள் கருத்து என்ன? என்று கேட்டபோது;

இந்தச் செய்தி வெளியான இரண்டு ,மூன்று நாட்களில் மட்டக்களப்பிலுள்ள வதிவிடப் பிரதிநிதியை நாம் சந்திக்க நேர்ந்தது. சந்திக்கும்போது இது பற்றி ஆழமாகக் கலந்துரையாடினோம். அவர்களுடைய தரப்பில் இருந்து தங்களுக்கு கிடைத்துள்ள சின்னச்சின்ன தகவல்களை எங்களிடம் தந்தார்கள் ... தில் வந்து திரும்பி... சிறுவர்களிலே- வீட்டிற்கு... பியவர்களின் பட்டிய... களுக்குக் கொடுத்தபோ... அதில் திருப்தியும் மகி... அடைந்தார்கள். அதன்... அவர்களுக்கு இன்... விடயத்தையும் வ... வேண்டியிருந்தது. ... இலங்கை இராணுவம் ... ஒரு ஒட்டுப்படையை ... வருகின்றது. அந்த ஒட்டு... தங்களுக்கான ... சிறுவர்களை வலிந்... பயிற்சியை வழங்கிக் ... ருக்கின்ற சூழ்நிலையி... கின்றது என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படடது